தமிழக மக்களின்
விடியலுக்கு வழி ...

தமிழ் நிலம்

திங்களிதழ்

இதழ் : 12

பொறுப்பாசிரியர்
**பொழிலன்**

ஆசிரியர் குழு
**கண.குறிஞ்சி**
**கோ.திருநாவுக்கரசு * பாவேந்தன்**
**கணியன் பாலன் * பாவெல்**
**சு.இராசன் * கொழுமம் ஆதி**

நெறியாளர்கள்
**அரங்க குணசேகரன்**
**திருமுருகன்**
பாவலர் **தமிழேந்தி * நிலவன்**
**ந.தமிழ்வாணன் * அரசெழிலன்**
**வீ.ந.சோமசுந்தரம்**

பரப்பல் குழு
**நிலவழகன் * சுப்பு மகேசு**
**தெய்வமணி * சுந்தரமூர்த்தி**
**இறை.பொற்கொடி * பழனிவேலு**
**கோகுல் காந்தி * பஞ்சநாதன்**

நன்கொடை

| | |
|---|---|
| தனி இதழ் | : ரூ. 10/ |
| ஓராண்டுக்கு | : ரூ. 120/ |
| பத்தாண்டுக்கு | : ரூ. 1000/ |

தொடர்புக்கு
**தமிழ்நிலம்**
மேடவாக்கம் கூட்டுச்சாலை
மேடவாக்கம், சென்னை - 600100.
கைப்பேசி : 86080 68002
81443 61533 | 9677481149
**thamizhnilam@yahoo.com**

# அன்பார்ந்த தமிழக மக்களே...

**த**மிழ்நாடும், தமிழர்களும், தமிழும் மிகப்பெரும் அடக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. பன்னாட்டு முதலாளிகளாலும், இந்தியப் பெரு முதலாளிகளாலும் தமிழ்நாடு சுரண்டப்பட்டும், சூறையாடப்பட்டும் நலிந்து கிடக்கிறது.

இந்தியப் பார்ப்பனிய அதிகார கும்பல்களால் தமிழர்கள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுகின்றனர். தமிழக அரசியல் வரலாறெல்லாம் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்மொழி கல்விநிலையில் மட்டுமன்றி, ஆட்சி நிலையில், அதிகார நிலையில், வழக்குமன்ற நிலையில், வழிபாட்டு நிலையில் என அனைத்து நிலைகளிலும் மறுக்கப்பட்டுப் புறக்கணிக்கப்படுகிறது ...

தன் இறுதி மூச்சைப் பிடித்துக்கொண்டு உயிர்த்திருக்கும் நிலையில் தமிழ்நாடும், தமிழினமும், தமிழ் மொழியும் உள்ளன.


இந் நிலையில் ஆரியப் பார்ப்பனியத்தையும், இந்திய வல்லாட்சியையும், பன்னாட்டுச் சூறையாடல்களையும் தமிழ் நாட்டிலிருந்து விரட்டியாகவேண்டிய நிலையில் இவற்றின் மீது அக்கறை கொண்ட இயக்கங்களுக்கான கடமைகள் உள்ளன.

ஆனால், தமிழ்நாட்டில் இயங்குகின்ற பல இயக்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் ஒவ்வொரு வகை முயற்சியில் தனித்தனியே இயங்கிக் கொண்டிருக்கிற நிலையில், இந்தியப் பார்ப்பனிய அதிகார வகுப்பை எளிதே எதிர்க்கவோ வீழ்த்தவோ இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை இந்தியப் பார்ப்பனிய அதிகார வர்க்கத்திற்குப் பெரும் ஆக்கமாகப் போய்விடுகிறது.

இந்தியப் பார்ப்பனிய அதிகார வர்க்கத்தை வீழ்த்தாமல், அதனோடு ஒட்டி உறவாடிக் கூட்டுச் சேர்ந்திருக்கிற பன்னாட்டுச் சுரண்டல் அதிகாரங்களையும் எதிர்க்காமல் தமிழ்நாட்டின் மற்றும் தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளைப் பெற்றெடுக்க முடியாது. தமிழ்நாட்டு உரிமைகளை மட்டு மல்ல, இந்தியாவில் அடைக்கப்பட்டிருக்கிற எந்த மொழித் தேசங்களின் உரிமைகளையும் எவரும் பெற்றுவிட முடியாது.

எனவே, தமிழ்நாட்டளவில் அந்த அதிகார வகுப்பினரின் ஆளுமையை வீழ்த்துவதற்கு இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் வேண்டும் எனும் பெரும் இலக்கோடு ஒருங்கிணைக்கப்படுகிற ஒரு தொடக்க முயற்சியாகவே, பெரியாரிய உணர்வாளர்களின் கூட்டமைப்பு - தொடங்கப்பட்டிருக்கிறது.




*தமிழர்களின் இன உரிமை மீட்பு என்பது பல நூற்றாண்டுக்கால முயற்சி என்று சொன்னாலும், நாட்டளவில் தமிழ்நாட்டை அடையாளப்படுத்தித் தமிழ்நாட்டு உரிமைகளோடு இணைத்து எழுச்சி கொண்ட இயக்க முயற்சிகளுக்கு எண்பதாண்டுக் கால வரலாறு உண்டு.*

*1938-ஆம் ஆண்டு தமிழக வரலாற்றில் முகாமை யான ஆண்டாகும் என்பதை அனைவரும் அறிந் திருக்கிறோம். அன்றைக்கு ஆரியப் பார்ப்பனிய வெறியோடு குலக்கல்வியைத் திணிக்கிற நோக் கோடு, இந்தியைக் கட்டாயப்படுத்தித் திணித்த ஆட்சியை எதிர்த்துத் தமிழகமே அணிதிரண்டிருந்த காலம் அது ...*

*வேறுபட்ட கொள்கைகள் கொண்டிருந்த இயக்கங்கள் எல்லாம் தமிழ்மொழி காக்க, தமிழினம் காக்க ஒரே மேடையில் ஒரே குரலாய் ஓங்கி ஒலித்த ஒரு பெரும் நிகழ்ச்சியை அடையாளப்படுத்திய ஆண்டு அது.*

*தமிழ்க் கடலாய் அதேபோது சமயச் சார்பின ராய் இருந்த மறைமலை அடிகள் மற்றும் சோம சுந்தர பாரதியார், தந்தை பெரியார், கி.ஆ.பெ. விசுவநாதம், குமாரசாமி, பட்டுக்கோட்டை அழகிரி சாமி, திருமலைச்சாமி - என எண்ணற்ற தமிழ் அறிஞர்களும், சுயமரியாதை இயக்கத்தவர்களும் தங்களுக்குள் வேறுபாடு கொண்டிருப்பினும் தமிழ் மொழி காக்க, இனம் காக்க ஒருங்கிணைந்து போராடினர் ... சிறை சென்றனர் ...* **தமிழ்நாடு தமிழருக்கே** *என்று ஓங்கி முழங்கினர் ...*

*அவர்கள் எல்லாம் அவ்வாறு முன்னெடுத்துக் களம் கண்டு போராடி இன்றைக்கு 80 ஆண்டுகள் ஆகிவிட்டன ...*

*ஆனாலும் ஆரியப் பார்ப்பனியம் வலுப்பெற்று இருக்கிற அளவில், அதிகாரம் கொண்டிருக்கிற அளவில் அதை எதிர்ப்பதான இயக்கங்கள் வலுப் பெறவில்லை ... அதிகாரம் பெற்றிருக்கவில்லை...*

*அன்றைய தமிழ்நாட்டு விடுதலைக்கான முன் வைப்பு இன்றைக்கும் அப்படியே கிடக்கிறது ...*

*அன்றைக்கு இருந்த உரிமைகள் அளவில் கூட இன்றைக்கு உரிமைகள் தமிழர்களிடம், தமிழ் நாட்டிடம் இல்லை; நிறைய இழந்திருக்கிறோம்...*

*கனிம வளங்கள், தொழில் வளங்கள், நில வளங்கள் என எல்லாமும் வெளிநாட்டு நிறுவனங் களுக்கும், இந்திய அரசு அதிகாரங்களுக்கும் கை மாறிவிட்டன ...*

*கல்வி உரிமை பெரும்பகுதி இந்திய அரசுக்குப் போய்விட்டது...*

*தமிழ் மருத்துவம் படிக்கவேண்டும் என்றாலும் இந்திய அரசு இசைவு இருந்தால்தான், அதுவும் சமசுக்கிருத மொழிக் கலப்பில்தான் படிக்க முடியும் ... தமிழ்நாடு அரசு அதில் தலையிட முடிவதில்லை ...*

*சென்னைக் கோட்டைக்குட்பட்ட அதிகாரம் இந்திய அரசுக்குப் போய்விட்டது ... அதில் கொடி ஏற்றுகிற, அதுவும் இந்தியக் கொடி ஏற்றுகிற உரிமைக்கே படாத பாடுபட்டுப் போராடி வாங்க வேண்டியதாயிற்று ...*

*தமிழ்நாட்டு வரலாற்றுச் சிறப்புமிக்கக் கீழடியை ஆய்வு செய்கிற உரிமை தமிழ்நாட்டு அரசுக்கு இல்லை ...*

*இந்திய அரசு நம் வரலாற்று எச்சங் களைப் பிரித்து மேய்ந்து, குத்திக் குதறி அழித்து மூடு கிறது ...*

*3000 ஆண்டு இலக்கியச் செழுமை படைத்த உலகின் பழமை வாய்ந்த நம் தமிழ் மொழி, இந்தியப் பார்ப்பனியத்தால் நீச பாசையாகப் புறக்கணிக்கப்படுகிறது ...*

*இவற்றையெல்லாம் மாற்றும் வழி என்ன? மாற்றுவோர் யார்? எப்படி மாற்றுவது?*

*இதற்கான வழித் தேடல்களில் ஒருவரோ, ஓர் இயக்கமோ, ஒரு கட்சி மட்டுமோ செயல்பட்டுத் தீர்மானித்துவிட முடியாது.*

*வலுப்பட்டிருக்கிற இந்தியப் பார்ப்பனிய அதிகார வகுப்புகளை வீழ்த்த வேண்டுமானால், அதை விளங்கிக் கொண்ட இயக்கங்கள் எல்லாம் இணைந்து மக்களைத் திரட்டி மிகப் பெருமளவில் வலுப்பட வேண்டும்.*

*அப்படியாக ஒருங்கிணைவதான நிகழ்வு திடுமென ஒரே நாளில் நடந்துவிடமுடியாது ...*

*இந்த இடத்தில் இன்னொன்றையும் விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.*

*பெரியாருக்கு முன்பு இயங்கி வந்தவர்கள் ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பரசியல் பேசி வந்தவர்களானாலும் இந்தியத்தையும், பார்ப்பனியத்தையும் இணைத்து எதிர்த்து வந்தவர் பெரியாரே.*

**இந்திய விடுதலை நாளையும், குடியரசு நாளையும் இழவு நாள்களாக அறிவித்தவர் அவர் ஒருவரே ...**

*ஆரியப் பார்ப்பனியம் தனக்கென இந்திய அரசமைப்பைத் தன்வயப்படுத்தி இந்தியமே ஆரியப் பார்ப்பனியம் என்பதாக ஆட்சி செய்து கொண்டு வரும் நிலையில், இந்திய எதிர்ப்பில்லாமல் ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பு இல்லை என்பதையும், ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பு இல்லாமல் இந்திய எதிர்ப்பு இல்லை என்பதையும் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.*

*ஆக, இந்தியத்தை அதன் ஆரியப் பார்ப்பனியத்தை எதிர்ப்பது என்பது எந்த வகையிலும் இந்திய அரசதிகாரத்தோடோ, பார்ப்பனியத்தோடோ சறுக்கல் இல்லாத நடைமுறையைக் கொண்டது.*

*அந்த வகையில் ஆரிய பார்ப்பனியத்தையும், இந்தியத்தையும் எதிர்த்து அவற்றின் பாசிசப் போக்கை எதிர்க்கவேண்டிய இக் காலச்சூழலில் பெரியார் நமக்குப் பெரும் ஆற்றலாய் முன் நிற்கிறார்...*

*அவ்வகையில், இன்றைக்குக் காலத்தின் தேவையாய் ஆரியப் பார்ப்பனியத்தை அதன் இந்தியத்தை முதன்மை எதிரிகளாய் நிறுத்திச் செயல்படுகிற பெரியாரிய இயக்கங்களைத் தோழமைப்படுத்திக் கொண்டு தமிழ்த்தேச இயக்கங்கள் களம் காண்பது காலத்தின் இன்றியமையாதது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.*

*அவ்வகையில், காலத்தால் பேரெழுச்சி கொள்ளுகிற அளவில் பெருந்திரளாய்த் தமிழர்கள் ஒருங்கிணையும் சூழலுக்கான அடித்தளமாய் இன்றைக்குப்* **பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பாய்** *ஒருங்கிணைந்திருக்கிறோம் ...*

*தமிழ்நாட்டு உரிமை விடுதலைக்கு, சாதிய இழிவுகளின் ஒழிப்பிற்கு, பார்ப்பனிய எதிர்ப்புப் போராட்டங்களுக்கான வழிகாட்டியாய் நமக்குப் பெரியார் மிகப்பெரும் அடையாளமாகவும் முன்னோடியாகவும் இருக்கிறார்.*

*பெரியாரின் கருத்துகளும் செயற்பாடுகளும் ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பையும் சாதிய இழிவு ஒழிப்பையும், தமிழ்நாட்டு உரிமை மீட்பையும் நமக்கு அடையாளப்படுத்தியிருக்கிற சூழலில்தாம், பெரியாரிய உணர்வாளர்களாய் ஒருங்கிணைந்து கூட்டமைப்பாய் நாம் திரண்டிருக்கிறோம் ...*

*திருவள்ளுவரின் அற கருத்துகளோடு ஊன்றியவர்கள் நாம் ... வேத மனுதர்மங்களின் கருத்துகளை வெளி யேற்றும் உணர்வு படைத்தவர்கள் நாம் ...*

*மறைமலையடிகளாரின் தமிழில், பாவாணரின், பாவேந்தரின், பெருஞ்சித்திரனாரின் தமிழோடு, தமிழிய உணர்வோடு, தமிழ்நாட்டுரிமை மீட்பு உணர்வுகளோடு உறவாடி உரம் பெற்றவர்கள் நாம் ...*

*அயோத்திதாசப் பண்டிதரின் கருத்தில் அம்பேத்கரின் அடித்தளத்தில் செழுமைப்படுத்திக் கொண்டவர்கள் நாம் ...*

*மார்க்சிய ஒளியில் அறிவியல் வழியில் அறிவைப் பகுத்தாயும் திறன் கொண்டிருப்பவர்கள் நாம் ...*

*இன்றைக்கு இந்த வகையில் திரட்சியாய் இணக்கமும் வலுப்படுத்தமும் கொண்டிருக்கிறோம்...*

*தொடர்ந்து நம் கொள்கைகளை மேலும் வலுப்படுத்தும் பெரும் முயற்சியில் நம் எதிரிகளை வலுவிழக்கவும் ஆட்டம் காணவும் வைப்போம்...*

**நம் நாடு தமிழ் நாடு, இங்கு ஏதடா இந்து நாடு என்று ஆரியப் பார்ப்பனியத்தை அதிரவைப்போம் ...**

நம் போர்க்குரல்கள் ஈட்டியாய் இந்தியப் பார்ப்பனியத்தின் செவிப்பறையைக் கிழிக்கட்டும் ...

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்

சங்காரம் நிசமென்று பரணி பாடுவோம் ...

இடக்கு செய் ஆரிய இனக் கொழுப்பு உருக்கிட

வடக்குக் கதவினை இறுக்கிப் பூட்டுவோம்!

***திருச்சி, தமிழருக்குத் திருப்பு முனையாகட்டும்! ...***

❖

திருச்சி உழவர் திடலில் 2018 திசம்பர் 23 அன்று
**பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின்** சார்பில் நடைபெற்ற

# தமிழின உரிமை மீட்பு மாநாடு

## தீர்மானங்கள்

### வீரவணக்கத் தீர்மானங்கள்

1. தமிழ்மொழி, இன, நாட்டுரிமைகளுக்காகப் போராடி உயிர்நீத்த ஈகியர்களுக்கும், 1938 - 1965 மொழிப் போராட்டங்களில் உயிரீந்த நடராசன், தாலமுத்து, அரங்கநாதன், சிவகங்கை இராசேந்திரன் உள்ளிட்ட எண்ணற்ற மொழிப்போராளியர்களுக்கும், சாதி ஒழிப்புப் போராட்டக் களங்களில் இதுநாள்வரை உயிரீந்த கீழ்வெண்மணியின் 44 தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், இந்திய அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் உயிரீந்த பட்டுக்கோட்டை இராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி உள்ளிட்ட ஈகியர்களுக்கும், பார்ப்பனிய மற்றும் மதவெறிகளுக்கு எதிராக மக்கள் நேயத்தோடுப் போராடி உயிரீந்த ஈகியர்களுக்கும் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு வீரவணக்கம் செலுத்துகிறது.
2. தமிழ்நாட்டிற்கு வெளியே பார்ப்பனிய மற்றும் மதவெறிகளுக்கு எதிராகப் போராடி அம் மத வெறியர்களாலே படுகொலை செய்யப்பட்டு உயிரீந்த தபோல்கர், பன்சாரே, கல்புர்கி, கௌரி லங்கேஷ் உள்ளிட்ட எழுத்தாளர்கள், அறிஞர்கள் மற்றும் பல்லாயிரக்கணக்கான போராளியர்கள், வெகுமக்கள் என அனைவருக்கும் இம் மாநாடு வீரவணக்கம் செலுத்துகிறது.
3. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காகத் தன் இன்னுயிர் ஈந்திருக்கிற எண்ணற்ற போராளியர்களுக்கும், ஈகம் செய்திருக்கிற தமிழீழ மக்களுக்கும், அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து உயிரீந்த தமிழ்நாட்டுத் தமிழர்கள் அப்துல் ரகூப், முத்துக்குமார், செங்கொடி உள்ளிட்ட ஈகியர் அனைவருக்கும் இம் மாநாடு வீரவணக்கம் செலுத்துகிறது.

### கொள்கைத் தீர்மானங்கள்

4. ஒரே மக்கள், ஒரே சட்டம், ஒற்றைப் பண்பாடு, ஒற்றை அடையாளங்கள் என்கிற வகையில் பார்ப்பனிய அதிகார வெறிகொண்டு இயங்குகிற இந்திய அரசு இந்தியாவிற்குள் அடக்கப்பட்டுள்ள பல்வேறு மொழித் தேசங்களின் வரலாற்றையும், பண்பாட்டையும், அடையாளங்களையும் மறுக்கிறது. இந்நிலையில் தமிழ்நாட்டு மக்கள் தங்களின் தேசியஇன அடையாள உரிமையின்கீழ்த் தங்களைத் ‘தமிழர்கள்’ என்றே பதிந்துகொள்வதற்கான வகையில் தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது.
5. மாநில உரிமைகளை நசுக்குவதற்காகவே ஆங்கிலேயர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ‘ஆளுநர்’ என்கிற அதிகார வடிவம் இன்றும் தொடர்ந்துகொண்டு மொழித் தேசங்களான மாநிலங்களை அடக்குகிற நடைமுறையை இக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது. எனவே ஆளுநர் என்போர் மாநிலங்களுக்குத் தேவையில்லை என இம் மாநாடு தீர்மானித்து எதிர்க்கிறது.
6. தமிழ்நாட்டின் பண்பாட்டையும், வரலாற்றையும் முற்றும் முழுமையாய் அழித்துப் பார்ப்பனியப் பண்பாட்டை, வரலாற்றைத் திணிக்கிற முயற்சியில் வன்முறைகளைத் தூண்டிப் பல படுகொலைகளை நடத்திவரும் ஆர்.எஸ்.எஸ் உள்ளிட்ட அமைப்புகள் தமிழ்நாட்டில் இயங்க, தமிழக அரசு தடை செய்திட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.
7. தமிழ்நாட்டின் ஊர்ப் பெயர்களைத் தமிழில் மாற்ற வேண்டுமான தமிழக அரசின் அண்மை அறிவிப்பை இம் மாநாடு வரவேற்கிறது. அந்த அறிவிப்பை விரைவில் நடைமுறைப்படுத்துவதோடு, எஞ்சியுள்ள எல்லா ஊர்ப் பெயர்களையும் முழுமையாக மாற்றிட வேண்டும் என்றும், தமிழில் பெயரில்லாத இந்திய, தமிழக அரசுகளின் திட்டங்களின் பெயர்கள், கோயில்கள் மற்றும் நிறுவனப் பெயர்கள் அனைத்தையும் தமிழிலேயே அமைத்திட வேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது.
8. தமிழ்நாட்டின் கீழடி உள்ளிட்ட பழஞ் சிறப்புகளைக் காக்கும் வகையில், தமிழகத் தொல்லியல் பொருள்களை, வரலாற்று இடங்களை மிகுந்த அக்கறையோடு தமிழக அரசு பாதுகாக்க வேண்டும் என்பதோடு, தமிழ்நாட்டில் இயங்கும் தொல்லியல் ஆய்வுத் துறை என்பது தமிழக அரசின் முழுக் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்றும், அதற்குத் தமிழக மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து போராடி அவற்றை மீட்க வேண்டும் என்றும் இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.
9. தமிழ்நாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் சாதி ஆணவப் படுகொலையில் ஈடுபடும் சாதி வெறியர்களை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

அப்படியானவர்கள்மீது தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதோடு, ஆணவப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்திட தனிச்சட்டம் இயற்றிட வேண்டும் என்றும் அதற்கென அதுகுறித்த உயர்நீதிமன்ற தீர்ப்பைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது. மேலும், சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குத் தனிச் சிறப்புத் திட்டத்தின்வழி கல்வி, வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு அளித்திட வேண்டும் என்றும், அவர்கள் சாதி சமயமற்றவர்கள் என்று பதிந்துகொள்கிறவகையில் அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது.

10. தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள், வழிபாட்டுத் தலங்கள் அனைத்திலும் தமிழில் மட்டுமே வழிபாடு இருக்க வேண்டும் என்றும், பிற மொழியினரின் வேண்டுகைக்கு வேண்டுமானால் அவர்களுக்கென அவர்கள் மொழியில் வழிபாடு செய்துகொள்ள வழி அமைக்கலாம் என்றும் வலியுறுத்துவதோடு, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராதல் வேண்டும் எனவும் இம் மாநாடு வலியுறுத்துகிறது.

11. அறிவியல் பெரிய அளவில் முன்னேறியிருக்கிற இக்காலத்தில் மலக்குழிக்குள் இறங்குவதும், கையால் மலம் அள்ளுவதுமான பணிகளில் மனிதர்களே ஈடுபடும் நிலைக்கு மாற்று வழிமுறைகளைக் கண்டறிந்து உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என இம் மாநாடு வலியுறுத்துகிறது. மேலும் கல்வி, வேலைவாய்ப்புகள் இடஒதுக்கீட்டு அடிப்படையில் நிறைவு செய்யப்படுவதில் அரசு முழுக் கவனம் செலுத்துவதோடு, தனியார் துறைகளிலும் இட ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்த வேண்டுமென இம் மாநாடு வலியுறுத்துகிறது.

12. பொதுப்பட ஒத்திசைவுப் பட்டியலில் (Concurrence List) இருக்கிற கல்வித் துறையை மாநிலங்களின் பட்டிய(State List)-லுக்கு உடனே கொண்டுவர வேண்டும் என்றும், அந்த வகையில் தமிழ்நாட்டில் இருக்கிற கல்விக்கூடங்கள் அனைத்தும் தமிழ்நாட்டு அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், இந்திய அரசின், பிற பன்னாட்டு நிறுவனங்களின் கல்விக்கூடங்கள் தமிழ்நாட்டில் இயங்க முழுமையாகத் தடைசெய்ய வேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது.

சித்த மருத்துவம் உள்ளிட்ட அனைத்து மருத்துவக் கல்வியும் தமிழ்நாட்டு அரசின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் - என்பதோடு, கல்விக்கான எந்த வகை இந்தியத் தேர்வுகளையும், 'நீட்' உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளையும் தமிழ்நாட்டிலும், பிற அனைத்து மொழித் தேசங்களிலும் தடைசெய்ய வேண்டும் என்றும், அவற்றோடு தொடக்கக் கல்விமுதல் ஆராய்ச்சிக் கல்விவரை அனைத்துக் கல்வியும் தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வியாகவே இருக்க வேண்டும் என்றும், ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளை மொழிப்பாடமாக மட்டுமே பயிலலாம் என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது.

13. தமிழ்நாட்டின் ஆற்று நீர்ப்பாசனப் பரப்புகளுக்குத் தடையாகிற வகையில் ஆந்திரா, கருநாடகா, கேரள அரசுகள் மேகதாது அணை, முல்லைப் பெரியாற்றில் புதிய அணை, பாலாற்றில் புதிய அணை என அணைகள் ஏதும் கட்டக்கூடாது என்றும், தமிழகப் பாசனப் பரப்புகளுக்கு இம்மி அளவும் தொல்லை வருகிற படியான அனைத்துச் செயல்பாடுகளையும் தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுத்துத் தடுக்க வேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது. மேலும் இந்திய அரசின் அணைகள் பாதுகாப்பு சட்டமுன்வரைவைத் தமிழகம் எதிர்க்க வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

14. தமிழ்நாட்டில் உள்ள வெளிநாட்டு மற்றும் ரிலையன்சு, டாட்டா உள்ளிட்ட இந்தியப் பெரு முதலாளிகளின் தொழிற்சாலைகளைப் படிப்படியாக நிறுத்தி, அவற்றைத் தமிழக அரசே தமிழக மக்களின் பங்கு முதலீட்டில் நடத்திட முன்வரவேண்டும் என இம் மாநாடு வலியுறுத்துகிறது. தமிழ்நாட்டு நிலங்களை, சுற்றுச் சூழல்களை நாசப்படுத்துகிற மீத்தேன், ஐட்ரோ கார்பன், நியூட்ரினோ, ஸ்டெர்லைட் மற்றும் அணுமின் நிலையங்களைத் தமிழக அரசு சட்டப்பேரவையில் தீர்மானம் இயற்றித் தகுந்த வகையில் சட்டமியற்றிக் கொள்கிற வகையில் முழுமையான முயற்சியில் தடுத்து நிறுத்திட வேண்டும் என இம் மாநாடு வலியுறுத்துகிறது.

15. சென்னை உயர்நீதிமன்றத்தினைத் தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என மாற்றுவதோடு, தமிழ்நாட்டிற்கான உச்ச நீதிமன்றம் தமிழ்நாட்டிலே அமைந்திட வேண்டுமான வகையில் அமைப்பை ஏற்படுத்தவும், தமிழ்நாடு உயர் நீதிமன்றம், தமிழ்நாடு உச்ச நீதிமன்றங்களில் தமிழே வழக்காடு மொழி ஆகிறபடியான அமைப்பு முறையைத் தமிழக அரசும், மக்களும், கட்சிகளும், இயக்கங்களும் முன்னின்று போராடி மாற்றவும் வேண்டுமென இம் மாநாடு வலியுறுத்துகிறது.

16. தமிழ்நாட்டு வணிகர்களை நசுக்கும் வகையில் தமிழ்நாட்டிற்குள் நுழைந்திருக்கிற, நுழைய இருக்கிற வெளிநாட்டு, மற்றும் ரிலையன்சு போன்ற இந்தியப் பெரு முதலாளிகளின் வணிக நிறுவனங்கள் தமிழ் நாட்டில் இயங்க வழிவிடக் கூடாது என இம்மாநாடு கட்டாயப்படுத்துகிறது. அதேபோல் வணிகர்களைப் பாதிக்கும் ஜி.எஸ்.டி உள்ளிட்ட இந்திய அரசின் அனைத்து வரிகளையும் தமிழக அளவில் மறுத்திட வேண்டும் எனவும் இம் மாநாடு தீர்மானிக்கிறது.

17. தமிழ்நாட்டு மின்சார வாரியத்தைத் தனியார் வயப் படுத்தி அதன்மூலம் இந்தியப் பெருமுதலாளிகளும், வெளிநாட்டு நிறுவனங்களும் தமிழகத்தில் முதலீடு செய்து தொழில் நடத்திடத் திட்டமிடுகின்றன. அதன் மூலம் இதுவரை அளிக்கப்பட்டு வரும் குடிசைவாழ் எளிய மக்களுக்கான இலவய மின்சாரமும், உழவர் களுக்கான விலையிலா (மானிய) மின்சாரம் நிறுத்தப் படும் ஏற்பாடும் உள்ளது. இப்போக்கை இம் மாநாடு வன்மை யாகக் கண்டிக்கிறது.

18. அண்மையில் ஏற்பட்ட 'கஜா' புயலுக்கும், ஏற்கனவே ஏற்பட்ட இயற்கைப் பேரிடர்களுக்கும் அடிப்படைத் தேவைக்கான இழப்பீட்டைக்கூட இந்திய அரசு தமிழ்நாட்டிற்குக் கொடுக்காமல் வஞ்சித்து வருவதை இம் மாநாடு கண்டிக்கிறது. தமிழ்நாட்டரசு கேட்டுக் கொண்ட வகையில் உடனடியாக 15 ஆயிரம் கோடி உருவாவை இந்திய அரசு அளித்திடவேண்டும் என இம் மாநாடு கட்டாயப்படுத்துகிறது.

19. நெடுஞ்சாலைகள் அனைத்திலும் வழிப்பறிக் கொள்ளையர்கள் போல இந்திய அரசு, எடுபிடி களையும், அடியாட்களையும் வைத்துக்கொண்டு சுங்கச் சாவடிகள் அமைத்து வெகுமக்களிடம் வரிகள் பிடுங்கிக் கொண்டிருப்பதை இம் மாநாடு மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. ஏற்கனவே வண்டிகள் வாங்கும்போதே சாலை வரிகள் செலுத்தப் பட் டிருக்கும் நிலையில் நெடுஞ்சாலை சுங்க வரிகள் என வரிகள் பிடுங்கும் செயல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமாய் இம் மாநாடு வலியுறுத்துகிறது.

20. வேளாண் தொழில் மிகவும் நசுக்கப்பட்டு வரும் சூழலில், வேளாண் இடுபொருள்களின் விலைகளைக் குறைக்கவேண்டும் என்றும், விளைச்சல் பொருள் களுக்கு ஞாயமான வகையில் விலை அளித்துக் கொள்முதல் செய்யவேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்துவதோடு, அரிசி, கரும்பு உள்ளிட்ட விளைச்சல் பொருள்களுக்கு இந்திய அரசு விலை உறுதிப்பாடு (நிர்ணயம்) செய்யாமல் வேளாண்மைக் குழுக்களே விலை உறுதிப்பாடு (நிர்ணயம்) செய்யும் படியாக இருக்கவேண்டும் என இம் மாநாடு கட்டாயப் படுத்துகிறது.

21. தமிழ்நாட்டில் 28 ஆண்டுகளாகச் சிறையில் அடை பட்டுக் கிடக்கிற பேரறிவாளன், நளினி, இராபர்ட் பயாசு, சாந்தன், முருகன், செயக்குமார், இரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேரையும் தமிழக அரசின் ஒப்புதலோடு விடுதலை செய்யலாம் என உச்சநெறிமன்றம் தீர்ப்பு உரைத்த பின்பும், எந்த விடையும் சொல்லாமல் தமிழக ஆளுநர் அமைதியாயிருக்கும் நிலையை விடுத்து, அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என இம் மாநாடு வலியுறுத்துகிறது. அவர்களைப் போலவே பல ஆண்டுகளாய்ச் சிறையில் அடைபட் டிருக்கிற இசுலாமிய சிறையாளர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என இம் மாநாடு வலியுறுத்துகிறது.

22. இலங்கையில் தமிழர்கள்மீது நடத்தப்பட்ட இனப் படுகொலைகளுக்கு அனைத்துத் தேச அளவில் 'சுதந்திர' மான உசாவல் (விசாரணை) தேவை என்பதை இம் மாநாடு வலியுறுத்துவதோடு, தமிழீழ விடுதலைக் கானப் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் இம் மாநாடு வலியுறுத்துகிறது.

23. தமிழக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகிற வகையில் தமிழிய உணர்வு சார்ந்த, சாதி சமய மறுப்பு உணர்வைத் தெளிவுபடுத்துகிற வகையிலான விழாக் களையும், நிகழ்வுகளையும், மூடநம்பிக்கை எதிர்ப்புப் பேரணிகளையும் தமிழகமெங்கும் பெரியாரிய உணர் வாளர்கள் கூட்டமைப்பின் இயக்கங்கள் ஒருங் கிணைந்தோ தனித்தோ முன்னெடுக்கவேண்டும் என இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

24. தமிழக மக்களிடையே பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியதையும், சாதி இழிவை ஒழிப்பதையும் தன் வாழ்க்கை நோக்கமாகக் கொண்ட பெரியார், சாதி ஒழிப்புக்காக ஆழ்ந்து சிந்தித்துச் செயலாற்றிய அம்பேத்கர் மற்றும் தமிழிய மக்களிடையே அற உணர்வு பரப்பிய அறிஞர்களும் செயற்பாட்டாளர் களுமான திருவள்ளுவர், வள்ளலார், அயோத்திதாசப் பண்டிதர், மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர், பாவேந்தர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் உள்ளிட் டவர்களின் பிறந்தநாள் நிகழ்வுகளைச் சிறப்பாக நடத்துவதோடு, ஆரியப் பார்ப்பனியத்திற்கு எதிராய்ப் பெரியார் முன்னெடுத்து நடத்திய திருக்குறள் மாநாடு களையும், சாதி ஒழிப்பு மாநாடுகளையும் இப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு ஒருங் கிணைத்து தொடர்ந்து ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடத்திடவேண்டுமென இம் மாநாடு அனைத்து அமைப்புகளையும் கேட்டுக் கொள்கிறது.

25. பெரியார் தம் இறுதிச் சொற்பொழிவிலே குறிப்பிட்டுக் கேட்டுக் கொண்டபடி, நம் நாடு தமிழ்நாடு என்கிற கொள்கை முடிவில், நம் மீதான சாதி இழிவுகளையும், அரசியல் அதிகாரத்தையும் செய்துவரும் அனைத்து அந்நிய ஆதிக்கர்களையும் தமிழ்நாட்டைவிட்டு வெளியேற்றிடும் வகையில் **நம்நாடு தமிழ்நாடு** என்கிற கொள்கை நோக்கோடு திட்டமிட்ட நீண்டகாலப் பணித்திட்டத்தை இக்கூட்டமைப்பு மேற்கொள்ள வேண்டுமென இம் மாநாடு பெரியாரிய உணர்வு கொண்ட அனைத்து இயக்கங்களையும் கேட்டுக் கொள்கிறது.

❖

# மாநில (த் தன்னாட்சி) சுயாட்சி, சுயநிர்ணய உரிமை, தனி ஆட்சி உரிமை

# எதை நோக்கித் தமிழ்நாடு?

❍ பொழிலன்

**வ**ல்லரசிய மற்றும் இந்திய முற்றாளுமை முதலாளிகளின் சூறையாடல்களுக்கு இடையிலும்...

இந்திய அரசின் பாசிச வெறித்தனங்களுக்கு ஆட்பட்டும்...

பார்ப்பனியக் கொடு வெறியால் நசுக்கப்பட்டும்...

சாதிய வன்கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டும்...

தமிழ்நாடு முழுமையாக அடிமைப்பட்டுக்கொண்டு இருக்கிறது.

இவற்றிலிருந்தெல்லாம் தமிழ்நாட்டை, தமிழக மக்களை விடுவிக்க வேண்டுமானால், அரசியல் - பொருளியலால் உரிமை பெற்ற தமிழக அரசை நிறுவாமல் இயலாது.

அவ்வகையில் தமிழ்நாட்டை அரசியலால், பொருளியலால் உரிமை பெற்றதாக்க வேண்டுமானால் தமிழ்நாடு,

- ❍ மாநில சுயாட்சிக்காகப் போராடுவதா?
- ❍ தமிழக அளவில் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவதா?
- ❍ தனிநாட்டு உரிமைக்காகப் போராடுவதா?

என்பதே நாம் அறிந்துகொள்ள வேண்டிய கொள்கை முடிவாக இருக்கிறது.

இவற்றில் எதை இலக்காகத் தேர்வு செய்வது? - என்கிற கருத்தில் தெளிவடைய வேண்டுமானால்,

- ❍ மாநில சுயாட்சி – என்றால் என்ன? எப்படி?
- ❍ சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? எப்படி?
- ❍ தனிநாட்டு உரிமை என்றால் என்ன? எப்படி?

என்பன குறித்தெல்லாம் நாம் தெளிவடைதல் வேண்டும். எனவே அவை குறித்தெல்லாம் சுருக்கமாக வாவது நாம் தெரிந்துகொள்வோம்.

### மாநில சுயாட்சி

மாநில சுயாட்சி என்பது மாநிலத் தன்னாட்சி என்கிற பொருளில், ஒரு கூட்டாட்சி நாட்டு அமைப்புக்குள் தனக்கென அளிக்கப்பட்ட அதிகார வட்டத்திற்குள் மாநிலங்கள் இந்திய நடுவண் அரசின் தலையீடு இன்றி சுதந்தரமாக - சுயமாக - தானாக நடத்தக்கூடிய ஆட்சியையே கூட்டாட்சி அரசமைப்பு (federal constitution) என்று குறிக்கிறது - என்றும்,

'மாநில சுயாட்சி' என்ற சொற்றொடர் உண்மைக் கூட்டாட்சி நாட்டிலுள்ள மாநிலத்தின் தன்னாட்சியையே அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறது - என்றும் அறிஞர் கு.ச.ஆனந்தன் தன் நூலுள் விளக்கியிருக்கிறார்.

"மாகாண சுயாட்சி (provincial autonomy) என்பதன் மூலம் காங்கிரசுக் கட்சி என்னென்ன கோரிக்கைகளை எழுப்பியதோ அதையேதான் இப்போது மாநில சுயாட்சி (state autonomy) எனும் பெயரில் குறிக்கிறோம்" - என்று தன்னுடைய 'மாநில சுயாட்சி' நூலில் கூறுகிறார் முரசொலி மாறன்.

இங்கு மாகாண அரசு என்பது அந்த மாகாண மக்களுக்கு முற்றிலும் கட்டுப் பட்டதாக இருக்க வேண்டும் என்று Evolution of defence academy in India எனும் நூலில் மசால்டன் என்பவர் குறிப்பிட்டிருப்பதை முரசொலி மாறன் எடுத்துக்காட்டுகிறார்.

மேலும், மாகாண சுயாட்சி - என்பது வெளியார் கட்டுப்பாடும் குறுக்கீடும் இல்லாத சுதந்திரம் என்றும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றத்திற்குப் பொறுப்பான ஓர் அரசு என்றும், சிந்தாமணி, மாசானி ஆகியோர் குறிப்பிட்ட விளக்கங்களை முரசொலி மாறன் தன் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

வெளியார் கட்டுப்பாடு என்பதில் உள்ள வெளியார் என்பவர் ஆளுநரும், அன்றைய குடியரசுத் தலைவரான வைசுராயும்தாம் என்று விளங்கிக் கொள்ள வேண்டும் என்கிறார் முரசொலி மாறன்.

ஆக, மாநில சுயாட்சி என்பதற்கு வெளியார் என்கிற ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் உள்ளிட்ட இந்திய அதிகாரங்கள் எவற்றின் குறுக்கீடும் இல்லாத, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக அளவிலான தமிழக சட்டமன்றத்திற்குரிய அரசு என்பதாகப் பொருள் கொள்ள முடியும்.

அத்தகைய மாநில அரசமைப்பு அமெரிக்காவில், சுவிட்சர்லாந்தில், இரசியாவில், கனடாவில், ஆசுத்திரேலியாவில் எல்லாம் இருந்ததாகவும் இப்போதும் அமெரிக்காவில், கனடாவில், ஆசுத்திரேலியாவில் எல்லாம் அத்தகைய நடைமுறை

இருந்துவருவதாகவும் முரசொலி மாறன் மேலும் பதிவிடுகிறார்

இரசியாவிலிருந்த மாநிலங்கள் தனிப்படைத் துறையையே கொண்டிருந்ததாக முரசொலி மாறன் விளக்குவார்.

**அடைந்தால் திராவிட நாடு, இல்லையேல் சுடுகாடு -** என்று தொடங்கிய தி.மு.க, 1962 வரை முழக்க மிட்டது.

1963-இல் பிரிவினைத் தடைச் சட்டத்தை இந்திய அரசு கொண்டு வந்தபின் திராவிட நாடு விடுதலைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டு, விடுதலைக்கான காரணங்கள் அப்படியே இருக் கின்றன; நாங்கள்தாம் கைவிட்டு விட்டோம் - என்றார் அண்ணா.

ஆக, மாநில சுயாட்சி என்கிற மாநிலத் தன் னாட்சி என்பது முழுக்க முழுக்க இந்திய நடுவண் அரசின் தலையீடு இல்லாத அதிகாரம் பெற்ற ஓர் அரசை பெற்றதாக இருக்கவேண்டும் என்கிற வகையிலேயே குறிப்பிடப்படுகிறது

தமிழ்நாடு தலை மாநிலமாக (மாகாணமாக - பிரசிடென்சியாக) இருந்தபோது அன்றைய காங் கிரசுக் கட்சியினர் தலை மாநில (மாகாண)த் தன் னாட்சி வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

அதற்கு முன்னர் 1911-ஆம் ஆண்டிலேயே வைசிராயாக இருந்த லார்டு ஆர்டிங்சு என்பவர் மாகாணங்களுக்கு அதிக அதிகாரம் தருவதே நல்லது என்று பிரித்தானிய ஆட்சியருக்குப் பரிந்துரை செய்தார். அவ்வகையில் இந்தியாவை Union of Autonomous Provinces-ஆக ஆக்கவேண்டும், 'யுனைட்டட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா' - என்ற நிலையைகூட உருவாக்கலாம் என்றும் பரிந் துரைத்தார்.

1915-இல் 'அரசியல் கட்டளைகள்' எனும் பெயரில் கோபாலகிருட்டிண கோக்கலே, ''மாகாண அரசுகளை முழு அதிகாரம் படைத்த நிலையில் ஒரு விடுதலை அரசாகச் செய்யவேண்டும்'' என் பதாக வலியுறுத்தினார்.

1916-இல் காங்கிரசுக் கட்சியும் முஸ்லிம் லீக் கட்சியும் இணைந்து ஏற்படுத்திக்கொண்ட 'லக்னோ ஒப்பந்தத்தி'ன்படி மாகாணங்களில் முழுமையான தன்னாட்சி அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தின...

1919-இல் அமைக்கப்பட்ட 'மாண்டேகு செம்சு போர்ட்' பொறுப்பில் உருவாக்கப்பட்ட இந்திய அரசுச் சட்டம் மாகாணங்களுக்கு உரிய உரிமை களைத் தர மறுத்தது. இதை முஸ்லிம் லீக் கடுமை யாக எதிர்த்தது.

1924-இல் நடத்தப்பட்ட ஜின்னா தலைமையி லான முஸ்லிம் லீக்கின் மாநாட்டில் முழுமையான சுயாட்சி பெற்ற நிலங்களைக் கொண்ட ஒரு கூட் டாட்சி அமைப்பு முறையையே ஏற்படுத்தியாக வேண்டும் என்று தீர்மானம் இயற்றப்பட்டது.

முஸ்லிம் லீக்கின் தலைவர்களுள் ஒருவரான பாவலர் இக்பால், ''இந்து - முஸ்லிம் சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும் என்றால் மாகாணங்கள் கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில்தான் இருந்தாக வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

1931-இல் கூட்டப்பட்ட 'சைமன் குழு', 'சுதேச' மன்னர்கள், மாகாணப் படிநிகராளியர் (பிரதிநிதி) கள் கொண்ட குழுவைக் கூட்டியது. அதில் காசுமீர் இளவரசர், பாட்டியாலா இளவரசர் உள்ளிட்ட சில 'சுதேச' மன்னர்கள் கூட்டாட்சி அமைப்பு முறையை முழுமையாக வலியுறுத்தினர்.

1930, 1931, 1932 ஆகிய ஆண்டுகளில் நடத்தப் பட்ட மூன்று வட்டமேசை மாநாடுகளிலும் மொழி வழி மாநில உரிமைகள் பற்றியும், மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் வலியுறுத்தப்பட்டன.

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான மேற்கண்ட நிகழ்வுகளில் கொடுக்கப்பட்ட கோரிக்கை அழுத் தத்தைப் பெயரளவிற்குக்கூட 1947-க்குப் பிறகு இந்திய அரசு செயல்படுத்திடவில்லை என்பதே முகாமையான செய்தி...

வல்லபாய் பட்டேல், மேனன் உள்ளிட்டோர் 'சுதேசி' நாடுகளின் அமைச்சகம் என்கிற பெயரில் ஏறத்தாழ 560-க்கும் மேலான மன்னர்களை அழைத்து ஒருங்கிணைத்து இந்தியாவைக் கட்டி உருவாக்கியபோதும், அந்த 'சுதேசி' மன்னர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் 'சுயாட்சி' தருவதாக முதலில் ஏற்றுக்கொண்டு பின்னர் ஏமாற்றி ஒரு விழா எடுத்து, விருந்து படைத்த தோடு முடித்துக்கொண்டது இந்திய அரசாங்கம்...

இந்நிலையில் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவு, மொழிவழி அடையாளங்கள் எழுச்சி கொண்ட காலங்களிலேயே 1921 - அளவில் மொழிவழி மாநில அளவில் தங்களின் கட்சி அமைப்புகளைக் கட்டத் தொடங்கி விட்டதைக் கவனிக்க வேண்டும்.

சென்னை, தலைமாநிலமாக இருந்த காலத்தி லேயே 'தமிழ்நாடு காங்கிரசுக் கட்சி' என்றே காங்கிரசார் கட்சி கட்டத் தொடங்கினர்.

அதன்பிறகு தலைமாநில (மாகாண) ஆட்சியை அமர்த்தி அதில் ஆளுநரின் அதிகாரங்களைப் பிரிட்டிசு ஆட்சியர் அதிகப்படுத்திக் கொண்ட போது காங்கிரசுக் கட்சிதான் முதன்முதலில்

ஆளுநரின் அதிகாரங்களைக் கடுமையாக எதிர்த்தது என்பதையும் கவனிக்க வேண்டும்

*1937*-இல் தில்லியில் நடைபெற்ற காங்கிரசுக் கட்சிச் செயற்குழுவில் கட்டமைக்கப்பட்ட பதினொரு தலைமாநில (மாகாண) அரசு வடிவங்களைக் கொண்ட இந்திய அரசியல் சட்டத்தைக் காங்கிரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், தேர்ந்தெடுக்கப் பட்டு உருவாக்கப்பட்ட தலை மாநில (மாகாண) அமைச்சரவை நடவடிக்கைகளில் ஆளுநர் தமது சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி எந்தக் குறுக்கீடும் செய்யக்கூடாது என்றும் காங்கிரசு வலியுறுத்தியது.

அதன்படி ஆளுநரின் தற்போக்கு முடிவுகளைக் காங்கிரசுக் கட்சியினர் கடுமையாக மறுத்தேதான் தங்களின் தேவைகளைப் பெற்றனர்.

*1939*-இல் பீகார், ஒன்றியத் தலை மாநிலம் (மாகாணம்) ஆகிய இரண்டு அரசுகளின் காங்கிரசு முதலமைச்சர்களும் ஆளுநர்களின் தலையீட்டை எதிர்த்துப் பதவியைத்துறந்தனர். அதனால் நெருக்கடிக்குள்ளான ஆளுநரின் வேண்டுகோளை ஏற்று மீண்டும் பதவியில் அமர்ந்தனர் என்பது தெரிந்து கொள்ள வேண்டியது.

இந்த வகையில் ஆங்கிலேய அரசுக்கு எதிரான தலை மாநில( மாகாண)த் தன்னாட்சி என்கிற முன்வைப்பு நடைமுறைகள்தாம் மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு மூலமாக அமைந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

*1937*-இல் தமிழ்நாட்டில் இராசகோபா(லாச்சாரி) யின் அரசு இருந்தபோது குலக்கல்வித் திட்ட நோக்கில் இந்தித் திணிப்பு போன்ற பார்ப்பனிய இந்திய அதிகார வெறித்தனங்கள் எல்லாம் நடத்தப்பட்ட போதுதான் *1938*-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உச்சத்தில் **'தமிழ்நாடு தமிழருக்கே'** என்கிற முழக்கம் தமிழ் அமைப்புகளாலும், பார்ப்பனிய எதிர்ப்புக் கொள்கையர்களாலும் குறிப்பாக மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், பெரியார், கி.ஆ.பெ போன்றவர்களால் முன்வைக்கப்பட்டதை அறியமுடியும்.

அதன்பிறகு *1939* தொடங்கி *1945* வரை இரண்டாம் உலகப்போர் நடந்த காலச்சூழலில் இந்திய அரசின் ஆளுமையர்களாக இருந்த பிரித்தானியர்கள், இங்கு தேர்தல்முறைப்படியான ஆட்சி அமைப்புகளைத் தவிர்த்துவிட்டு ஆளுநர்களைக் கொண்டே அரசமைப்பை உறுதிப்படுத்தியிருந்தனர்.

அந் நிலையில் தமிழகத்தில் முதலமைச்சர் பொறுப்பு என்கிற நிலையில் எவரும் இல்லாமல் ஆளுநர் மட்டுமே பொறுப்பேற்றிருந்த காலமாக அது இருந்தது.

அந்த இடைக்காலத்தில் *1940, 42*-ஆம் ஆண்டுகளில் பெரியாரைச் சென்னைத் தலைமாநிலத்தின் முதலமைச்சராகப் பதவி ஏற்கும்படி அன்றைய ஆளுநர் ஆர்த்தர் ஹோப் என்பவர் வலியுறுத்தி அழைத்தார். ஆனால், பெரியார் அதை மறுத்துவிட்டார்.

அக்காலச் சூழ்நிலையில் *1940*-இல் தென்னிந்திய நலஉரிமைக் கழகத்தால் முன்னெடுத்து நடத்தப்பட்ட மாநாட்டில், தனிநாட்டு உரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்ததோடு அதற்கான ஒரு திட்டக்குழுவையும் மாநாடு அறிவித்தது. பின்னர் *1944*-இல் தென்னிந்திய நல உரிமைக் கழகம் **திராவிடர் கழகம்** எனப் பெயர் மாற்றப்பட்ட பிறகு நடந்த மாநாட்டில் **திராவிட நாடு பிரிவினை** எனத் தீர்மானம் இயற்றப்பட்டது. *1945*-இல் நடந்த மாநாடுகளிலும் திராவிட நாடு விடுதலைக்கென ஒரு படை அமைக்கவேண்டும் என்பதாகத் தீர்மானம் இயற்றப்பட்டது.

இச்சூழலில், திராவிடநாடு குறித்த கருத்துகள் வலுப்பட்டு வருவதைக் கண்ட இராசகோபா (லாச்சாரி), காங்கிரசுக் கட்சிக்குள் தனக்குச் சார்பாக இருந்தவர்களைத் தூண்டிவிட்டு எதிர்வினையாற்றிக் கொண்டிருந்தார்.

அவ்வகையில் காங்கிரசுக்குள்ளிருந்தபடியே *1946*-இல் தமிழரசுக் கழகத்தை ம.பொ.சி உருவாக்கினார். தமிழரசுக் கழகத்திற்குக் கொள்கையாக **இந்திய ஒற்றுமை, மாநில சுயாட்சி** என்று அறிவித்தார் ம.பொ.சி.

தமிழக அளவில் தன்னுரிமை, தன்னாட்சி இவையெல்லாம் போராடிப் பெறப்பட வேண்டும் என்பதை விட, இந்திய ஒற்றுமையை முழுமையாக பேணுவதையே ம.பொ.சி முனைப்பாக முன்னிறுத்திச் செயல்பட்டார்.

எனவேதான், **குலக்கல்வித் திட்டத்தை** ஆதரித்தார் ம.பொ.சி; **இந்தியே இந்தியாவின் ஆட்சிமொழி** என்பதாக வலியுறுத்தினார்; **இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இந்தி எழுத்துகள் 'தார்' பூசி அழிக்கப்பட்டதையெல்லாம் மண்ணெண்ணெய் விட்டு அந்தத் 'தாரை' அழித்தார்; நாம் தமிழர்களாக மட்டுமல்லாமல் இந்துக்களாகவும், இந்தியர்களாகவும் இருத்தல்வேண்டும்** என்று வலியுறுத்தினார்; **சமசுக்கிருதத்தைப் பெருமளவில் புகழ்ந்து ஏற்றுக்கொண்டார்; இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி சமசுக்கிருதமே என்று சொல்லப்படுவதை, தமிழ் மீது பற்றுடையவர்கள் மறுக்கத் தேவையில்லை** என்பதாக அறிவித்தார்; **சமசுக்கிருத மொழியைப் பிழையற பயின்று புரோகிதத்தொழில் செய்வோர் இருப்பார்களாயின் அந்தப் புரோகிதர்களைக் கொண்டு தமிழர்கள் தங்கள் வீட்டுத் திருமணங்களைச் செய்தல் வேண்டும்** என்று

வலியுறுத்தினார்; தெய்வப்பற்று, பாரதத் தேசப்பற்று, ஒருமைப்பாட்டில் நம்பிக்கை, தேசிய ஒருமைப்பாட்டில் ஆர்வம், ஒழுக்கம், கலாச்சாரம் ஆகியவற்றைக் கொண்ட ஓர் அரசியல் கட்சியே தமிழரசுக் கழகம் - என்பதாக அறிவித்தார்; தமிழ்நாட்டின் பிரிவினைக் கொள்கை களை அழுத்தந்திருத்தமாகக் கண்டித்து இயக்கம் நடத்திய ஒரே கட்சி, தமிழரசுக் கழகம்தான் என்பதாகப் பெரு மைப் பட்டுக் கொண்டார்; பெரியார் – இந்திய தேசியக்கொடி எரிப்பு, அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம், தேசப்பட எரிப்புப் போராட்டம், இந்திய விடுதலை நாளைத் 'துக்க' நாளாக அறிவித்தபோதெல்லாம், அவற்றை யெல்லாம் முழுமூச்சாக எதிர்த்தது தமிழ்நாடு காங்கிரசு அல்ல, அதற்கு வெளியே என் தலைமையில் இயங்கிய தமிழரசுக் கழகம்தான் என்று பெருமை பீற்றிக் கொண்டார்; தனக்கான வழிகாட்டிகளாக இராச கோபா(லாச்சாரி)யையும் சத்தியமூர்த்தியையும் ஏற்றுக் கொண்டிருப்பதாக வெளிப்படையாக அறிவித்தார்; இலங்கைத் தமிழர்களுக்குத் தமிழ் நாட்டுத் தலைவர்கள் உதவி வழங்குவது காலித் தனம் என்று தொடக்கத்திலேயே பேசினார்; இலங்கைக்கு இந்திய வெறிப்படை சென்றபோது, அதைப் பாராட்டி ஓயாமல் பொய்ப் பரப்புரை செய்தார். தெய்வத்தின்பேரால் நம் முன்னோர்கள் கடைப்பிடித்த அமாவாசை, கிருத்திகை, சஷ்டி விரதங்களை இன்றும் நாம் அனைவரும் சரியாகக் கடைப்பிடித்தால் உணவுப் பற்றாக்குறை தீர்ந்து விடும் என்பதாக மூடநம்பிக்கைக் கருத்தைப் பரப்பினார்...

ஆக, இந்த வகையில் எல்லாம் முழுமையாகப் பார்ப்பனிய அடிமையாகச் செயல்பட்ட ம.பொ.சி, மாநில சுயாட்சியை, தமிழ்நாட்டு விடுதலை அல்லது திராவிட நாட்டு விடுதலைக் கருத்தை தி.மு.கவினர் கைவிடுவதற்காகவே முன்னெடுத்துப் பேசினார் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

எனவே, பெரிய அளவில் மாநில சுயாட்சி குறித் தெல்லாம் அவர் முன்மொழியவுமில்லை... அதற் காக இந்தியாவை எதிர்த்துப் போராடவுமில்லை...

வழக்கமாக, மூன்று அதிகாரங்கள் எனப் படைத் துறை, பொருளியல் அதிகாரம், வெளிநாட்டு தொடர்புகள் இவையெல்லாம் மட்டும் இந்திய அரசிடம் இருக்கவேண்டும் என்பதாக ஒரு சில இடங்களில் பதிவு செய்தாரே அல்லாமல் மாநில சுயாட்சி குறித்து வேறு எவ்வகையிலும் அவர் வலுப்பட முன்மொழியவுமில்லை, போராடவுமில்லை.

இந்நிலையில், தமிழக வரலாற்றில் மாநில சுயாட்சி என்கிற தன்னாட்சி உரிமையை இடைக் காலத்தில் வலுப்பட எழுதவும் பேசவும் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே.

1949-இல் தி.மு.க தொடங்கப்பட்டாலும் அது தொடங்கப்பட்ட காலத்தில் அடைந்தால் திராவிட நாடு, இல்லையேல் சுடுகாடு என்கிற முழக்கத்தோடு தான் அக்கட்சி செயல்படத் தொடங்கியது.

1952-ஆம் ஆண்டுத் தேர்தலில், திராவிட நாடு விடுதலை கோரிக்கையை யார் ஏற்றுக் கொள் கிறார்களோ அவர்களுக்கே ஆதரவு தெரிவிப்ப தாக அறிவித்தது, தி.மு.க.

1957-ஆம் ஆண்டுத் தேர்தலை நேரடியாகத் திராவிடநாடு விடுதலையை முன்னிறுத்தி சந்தித்தது, தி.மு.க. இதற்கு முன்னால் இன்னொரு செய்தி யையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

1957-இல், தேர்தலில் தி.மு.க பங்கெடுக்கத் தொடங்கியது. அதே காலத்தில்தான் ஆர்.எசு.எசு -இன் பின்புலத்தில், தூண்டலில் 'ஜன சங்கம்' என் றொரு கட்சி உருவாக்கப்பட்டு தில்லியில் முதன் முதலில் தேர்தலில் பங்கேற்றது.

அப்போது ஜன சங்கத்திடம் ஒரு திட்டம் இருந்தது. அதாவது, காங்கிரசை எதிர்த்திடும் கட்சி, எந்தக் கொள்கையின் அடிப்படையில் இருந் தாலும் அதனோடு கூட்டுச் சேர்வது என்று ஒரு திட்டத்தை வகுத்துக்கொண்டது. அப்படியான வகையில் திராவிட நாடு விடுதலை அரசியலைக் கொண்டிருந்த தி.மு.க-வையும் சார்புப்படுத்திக் கொள்வதற்குத் திட்டமிட்டது. ஆர்.எசு.எசு, ஜன சங்கப் பின்னணியில் செயல்படத் தமிழகத்தில் அவர்களுக்கு ராசகோபா(லாச்சாரி) கிடைத்தார்.

1957-ஆம் ஆண்டுத் தேர்தலிலும், 1962-ஆம் ஆண்டுத் தேர்தலிலும் காங்கிரசு வெற்றி பெற்று காமராசர் முதலமைச்சராக அமர்ந்தார். ஆனால் 1952-ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரசு வெற்றி பெற்று இராசகோபா(லாச்சாரி) முதலமைச்சராக அமர்ந்தபோது அவரின் குலக் கல்வித் திட்டம் உள்ளிட்ட பார்ப்பனிய நடைமுறைகளைக் காம ராசர் காங்கிரசில் இருந்தபடியே எதிர்த்ததால் இராசகோபா(லாச்சாரி)-க்குக் காமராசர் மீது மறுப்பு இருந்தது.

இந் நிலையில் காங்கிரசில் 1957, 1962-ஆம் ஆண்டுத் தேர்தல்கள்வழிக் காமராசர் முதலமைச்ச ரானாலும் சத்தியமூர்த்தி, சி.சுப்பிரமணியம் உள்ளிட்ட தன் பற்றாளர்களைக்கொண்டு காமராச ருக்கு எதிர் வேலைகளைச் செய்துகொண்டிருந்தார் இராசகோபா(லாச்சாரி).

1962-இல் காமராசர் மீண்டும் முதலமைச்ச ரான பின் அவரை எப்படியாவது அப் பொறுப்பில் இருந்து நீக்கிவிடும்படியான வேலையைச் செய்கிற வகையிலே அனைத்திந்தியத் தலைவராக அவரைக்

கொண்டு செல்லும்படியாகத் தில்லிக்கு அனுப்பி விட்டுத், தமிழ்நாட்டில் சத்தியமூர்த்தி, சி.சுப்பிர மணியம் ஆகியோர் ஆதரவில் பக்தவச்சலத்தை முதலமைச்சராக ஆக்கியதில் இராசகோபா (லாச்சாரி)-யின் பங்கு உண்டு.

அதோடு நில்லாமல், தமிழ்நாட்டு விடுதலை, திராவிட நாட்டு விடுதலை, பார்ப்பனிய எதிர்ப்பு உள்ளிட்ட முனைப்புகளை எல்லாம் எதிர்ப்பதற் காக ம.பொ.சியைப் பின்னிருந்து இயக்கினார் இராசகோபா(லாச்சாரி).

*1946*-இல் ம.பொ.சியால் தொடங்கப்பட்ட தமிழரசுக் கழகத்தைத் திராவிடர் கழகத்திற்கு எதிராகவும், பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத் திற்கு எதிராகவும் இயக்கியதில் இராசகோபா (லாச்சாரி)-யின் பங்கு குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி சூழ்ச்சியாகத் தன்னுடைய சுதந்திராக் கட்சி, தமிழரசு கழகம் ஆகியவற்றைத் தி.மு.கவுடன் *1967*-ஆம் ஆண்டுத் தேர்தலில் கூட்டுச் சேர்த்து தி.மு.கவின் பார்ப்பனிய எதிர்ப்புக் கருத்து களை முனைமழுக்கியதில் இராசகோபா(லாச்சாரி) -யின் பங்கு அதிகமானது.

தேர்தல் களத்தில் தி.மு.கழகம் பங்கெடுத்துக் கொண்டதும், பிரிவினைத் தடைச் சட்டத்திற்கு அஞ்சிக்கொண்டு திராவிட நாடு கொள்கையைக் கைவிட்டதும், இந்திய எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்புகளில் நெகிழ்வுத் தன்மை காட்டியதும் இராசகோபா(லாச்சாரி) உள்ளிட்ட ஆரியப் பார்ப்பனர்க்கு வாய்ப்பாகப் போய்விட்டது.

இந்நிலையில்தான், மாநிலத் தன்னாட்சி - சுயாட்சி என்பதை ஓர் அரசியல் மாற்றாக, தொடக் கத்தில் காங்கிரசு முன்மொழிந்த முழக்கத்தை, பின்னர் ம.பொ.சி முன்வைத்த அதே முழக்கத்தைத் தி.மு.க முன்னெடுக்கத் தொடங்கியது.

இந்திய அளவில் **படைத்துறை, நாணய அச்சடிப்பு, வெளியுறவு, உள்நாட்டுத் தொடர்புகள்** என நான்கு அதிகாரங்களை நடுவண் அரசுக்குத் தந்துவிட்டு, மற்றெல்லா அதிகாரங்களையும் மாநில அரசுகளே வைத்திருப்பது என்பதான விளக்கத்தை மாநில சுயாட்சிக்கு முரசொலி மாறன் தன் நூலில் பதிவு செய்திருந்தார்.

அன்றைய அளவில், இந்திய அரசின் ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்டு *97* அதிகாரங்களும், மாநில அரசுகளுக்கு உட்பட்டு *66* அதிகாரங்களும், இரண்டு அரசுகளுக்கும் உட்பட்டதான பொதுப் பட்டியலின்கீழ் *47* அதிகாரங்களும் இருந்தன வாகச் சுட்டப்பட்டிருந்தது.

மாநில அரசுகளுக்கு உட்பட்ட *66* அதிகாரங் களுள் *31* அதிகாரங்கள் மட்டுமே மொழிவழி மாநில அரசுகளுக்கு முற்றும் முழுமையாக உரிமை யுடையனவாக இருந்தன. எஞ்சிய *35* அதிகாரங் களும் நடுவண் அரசு அதிகாரப் பட்டியலின் மூல மான கட்டுப்பாட்டிலும், பொதுப் பட்டியலின் கட்டுப்பாட்டிலும் உள்ளடங்கியவை.

**ஆக, மாநில அரசுக்கு - தமிழக அரசுக்கு உரிமை உடையதாகச் சொல்லப்படுகிற 31 அதிகாரங்களும் மிகமிகப் பெரிய அதிகாரமற்ற துறைகள் என்பதை மிக விளக்கமாக அறிந்துகொள்ள வேண்டும்.**

மாநிலத் தன்னாட்சியிலும், சுயநிர்ணய உரிமை யிலும், தனிநாட்டு உரிமையிலும் அக்கறையுள்ள அனைவரும் ஆழ்ந்து அறிந்து அக்கறை செலுத்த வேண்டியவை இவை.

அன்றைய காலத்திலிருந்து இன்றளவில் மேலும் பல மொழி மாநில உரிமைகளை இந்திய அரசு பறித்துக் கொண்டே வந்துள்ளது என்பதையும் அறியவேண்டும்.

மாநிலத் தன்னாட்சியை வலியுறுத்தும் வகை யில் இராசமன்னார் குழு என்று ஒரு குழுவை *1969*-க்குப் பின்னர் தி.மு.க தலைவர் கலைஞர் உருவாக்கினார். அதன்வழி மாநிலத் தன்னாட்சி (சுயாட்சி) குறித்தெல்லாம் விரிவான ஆய்வை முன்னெடுத்து விளக்கி அந்த அறிக்கையை இந்திய அரசிடம் கொடுத்தார். ஆனால், அதை இந்திய அரசு பொருட்படுத்தவில்லை.

*1974*-இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநிலத் தன்னாட்சி (சுயாட்சி) குறித்துத் தீர்மானம் இயற்றித் தில்லிக்கு அனுப்பினார்... தில்லியினர் அதுபற்றி வாய்திறக்காமல் வாய்மூடிக் கிடந்தனர்... தாங்கள் நடத்திய மாநாடுகளிலெல்லாம் மாநில சுயாட்சி குறித்து விளக்கமாகத் தீர்மானங்களை இயற்றிப் பேசினர்...

ஆனால் ஒரு விளைவும் இல்லை...

இந்திய அரசு கண்டுகொள்ளவேயில்லை...

இது குறித்தெல்லாம் இந்திய அரசு கண்டு கொள்ளாது - என *1950*-களிலேயே பெரியார் விளக்கியிருந்தார் - **சட்டசபை நுழைவும் நாட்டுப் பிரிவினையும்** - என்கிற கருத்தின் கீழ்...

“தேர்தலில் நின்று சட்டசபைக்குப் போக வேண்டும் என்று சொல்கிறார்கள் - அதாவது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி ‘பவர் பாலிடிக்சு’ மூலம் போராட வேண்டும் என்கிறார்கள்...

நான் கூறுகிறேன் நம்மால் ஒன்றுமே செய்ய முடியாது. நாம் ஒன்றும் செய்யமுடியாதபடியான சட்டதிட்டங்களை அங்கு அமைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நாம் போய், திராவிடநாடு தனி நாடாகப் பிரிய வேண்டும் என்று என்னதான் ஏக

மனதாகத் தீர்மானித்தாலும் சட்டசபைத் தலைவராக இருப்பவர் இந்த மாதிரியான தீர்மானம் செய் வதற்குச் சட்டத்தில் இடமில்லை - என்று கூறித் தள்ளிவிடுவார்கள். இதைச் செய்ய முடியாமல் அங்கு போய் நாம் இருக்கவேண்டும் என்கின்ற அவசியமும் நமக்கு இல்லை. எனவேதான், அத் தகைய சட்டங்கள் மாற்றியமைக்கப்படவேண்டும் என்று நாம் வெளியில் இருந்து போராடி வரு கிறோம்.

ஒரு வீட்டை இடிக்கவேண்டும் என்றால் அந்த வீட்டுக்கு வெளியில் இருந்துகொண்டுதான் இடிக்க வேண்டுமே தவிர, வீட்டுக்குள் இருந்துகொண்டே இடித்தால் நம் மீதே விழுந்து நாமே அழிய வேண்டி யதுதான். எனவேதான் நாம் வெளியிலிருந்து மக்களுக்குப் பகுத்தறிவு உண்டாக்கும் பணியில் வேலை செய்கிறோம்...'' என்று பெரியார் 1951-இல் பேசவும் எழுதவும் செய்திருக்கிறார்...

1963-இல் பிரிவினைத் தடைச்சட்டம் கொண்டு வந்தபோது அதைக் கடுமையாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் எதிர்த்தார்...

''சீரும் புயலை மீன்வலை கொண்டு அழிக்கும் மடமைச் செயல்'' என்பதாகத் தென்மொழியில் எழுதினார்...

1972-இல் இந்திய அரசு கொடுத்த நெருக்கடி களுக்கு, ''நாங்கள் மாநில சுயாட்சிதான் கேட் கிறோம்; இந்திய அரசு அமைப்புக்குள் இருந்து அதன் ஒற்றுமையைப் பேணவே விரும்புகிறோம், மற்றபடி யாரோ சிலர் பிரிவினை கேட்பதற்கு நாங்கள் காரணமல்ல'' என்பதாகத் தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி இந்திய அரசுக்கு விடை கூறியிருந்தார்...

அதற்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ''வேறு யாரும் இல்லை நாங்கள் தாம் (தமிழ்நாடு விடு தலை கேட்கிறோம்)'' என்று 1972-இல் ஆசிரிய உரை எழுதினார். தமிழகம் பிரிவதற்குப் பத்துக் காரணங்கள் என்பதாக வரிசைப்படுத்தினார்.

1. தமிழ் உயர்வடைய வழியே இல்லை.
2. இந்தியை விலக்கவே முடியாது.
3. குல, சமயப் புரட்டுகள் அகலா.
4. ஆரியப் பார்ப்பனிய நச்சுத் தன்மை இருந்து கொண்டே இருக்கும்.
5. தமிழ்ப் பண்பு கெடும்.
6. தமிழ்மொழி இலக்கண இலக்கியங்கள் அழியும்.
7. சமசுக்கிருதம் தலையெடுக்கும்.
8. தமிழினம் சிதறுண்டு போகும்.
9. பொதுவுடைமை அமைப்புக்கு வழியே இல்லை.
10. அரசியல் அதிகாரங்கள் தன்னிறைவு பெறா.

மிசா, தடா என அடக்குமுறைச் சட்டங்கள் பலவற்றுக்கும் ஆளாக்கப்பட்டிருந்தாலும் பாவல ரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தன் வாழ்நாள் இறுதிவரை தனித் தமிழ்நாடு விடுதலைக்கான போராட்டத்தை ஓர் இம்மியளவும் கை நெகிழ்க் காமல் முன்னெடுத்துச் சென்றார் என்பது அறியப் பட வேண்டியது...

**இந்தியா யார் அப்பன் வீட்டுச் சொத்தும் இல்லை; இங்குள்ள தேசிய இனங்களின் சொத்து** - என்றும்,

**தனித்தமிழ்நாட்டு விடுதலை முயற்சிகளை எவராலும் தடுத்து நிறுத்திவிடமுடியாது** - என்றும் அறைகூவல் விடுத்தார்..., பாவலரேறு.

இத்தகைய பின்னணியிலிருந்து, நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவென்றால், மாநில சுயாட்சி எனும் கருத்து இந்தியத்திற்கு எதிரானதோ, வல்லரசியத்திற்கு எதிரானதோ, பார்ப்பனியத்திற்கு எதிரானதோ அல்ல என்பதுதான்.

அதாவது இந்தியாவை, இந்திய அரசியல் சட் டத்தை, இந்தியப் பார்ப்பனியத்தை எதிர்க்காமல் நெளிவு சுழிவாக அணுகிக்கொள்ளலாம் என்பது தான். படைத்துறை வலுவும், பண அச்சடிப்பும் அதன் வழியான பொருளியல் ஆளுமையும் எங்கு குவிந்திருக்கிறதோ அங்குதான் அரசியல் அதிகாரம் குவிந்திருக்க முடியும்.

''அரசியல் அதிகாரத்தையும், பொருளியல் அதிகாரத்தையும் பெறாமல் குமுக மாற்றத்தைச் செய்ய முடியாது'' என்ற அம்பேத்கரின் கருத்து இங்கு எண்ணத் தகுந்தது.

மாநிலத் தன்னாட்சி என்பது, பன்னாட்டு மூல முதலீடுகளை மறுக்கவில்லை, பார்ப்பனிய அதி கார இந்திய அரசமைப்பை மறுக்கவில்லை, சாதிய அமைப்பை மறுப்பதற்கான திட்டங்களை வகுத் துக் கொள்ளவில்லை என்றாகிறபோது, அஃது எப்படி முழு அதிகாரம் படைத்ததாக இருக்க முடியும்? வல்லரசியத்தை, பார்ப்பனியத்தை, சாதி யத்தை வீழ்த்துவதாக ஆகமுடியும்? ஏதோ ஓர் இணக்கப்போக்கில் இந்திய அரசிடையே அடி பணிந்து போகிற நடைமுறையைத்தான் அது கொண்டிருக்க முடியும்.

அதேபோல், மாநிலத் தன்னாட்சி முழக்கத்தை முன்வைப்பவர்கள் அனைத்து மொழிகளையும் ஆட்சிமொழி ஆக்குவோம் என்று கருத்து கொண் டிருக்கின்றனர்.

முதலில் அனைத்து மொழிகள் என்பன எவை எவை என்பதையே அவர்கள் தீர்மானித்திட வில்லை. இந்திய அரசு வாய்ப்பியத் தன்மையி லேயே தொடக்கத்தில் 14 மொழிகள் என்றும், பின்னர் 15 மொழிகள் என்றும், படிப்படியாகக்

கூட்டி இப்போது 22 மொழிகளைத் தேசிய மொழிகள் என்பதும், அவற்றுள் சமசுக்கிருதத்தையும் தேசியமொழி என்று இணைத்து வைத்திருப்பதும், முழுக்க முழுக்க வாய்ப்பிய (சந்தர்ப்ப) மானதே. எனவே அனைத்து மொழிகளும் என்பதில் முறையான தீர்மானிப்பு வேண்டும்.

அடுத்து அவற்றை ஆட்சி மொழியாக்குவது என்பது பச்சை ஏமாற்று.

படைத்துறை ஆணை அல்லது கட்டளைகளை எப்படி அனைத்து மொழிகளிலும் செய்யமுடியும்? பணத் தாளில், காசுகளில் எப்படி அனைத்து மொழிகளையும் பயன்படுத்த முடியும்? வழக்கு மன்றங்கள் அனைத்து மொழிகளிலும் எப்படி நடத்தப்பட முடியும்? ஆக, மாநிலத் தன்னாட்சியில் மொழிக் கொள்கையேகூடத் தெளிவற்ற நடைமுறை ஆகிவிடுவதைக் கவனிக்க வேண்டும்.

மேலும், இந்திய அளவில் வேறு எந்த மாநிலத்திலிருந்தும் அதாவது மொழித் தேசங்களிலிருந்தும் மாநிலத் தன்னாட்சி (சுயாட்சி) கோரிக்கை எழாத போது, தமிழ்நாட்டிலிருந்து மட்டும் மாநிலத் தன்னாட்சி (சுயாட்சி) பெற்றுவிட முடியாது...

இந்திய அளவில் கூட்டாட்சி அமைக்கிறபடியான திட்டம் உருவாக்கப்படுகிறபோதே, மொழித்தேச மாநிலங்கள் எல்லாம் மாநில உரிமைகளுக்கான, சுயாட்சிக்கான முழக்கத்தை எழுப்பிடவும் முடியும் மாநில சுயாட்சியைப் பெறவும் முடியும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்...

தன்னைத் தமிழ்த்தேசிய இனத்தினன் என்று கூடப் பதிந்துகொள்ள முடியாத நடைமுறையை வைத்துக்கொண்டு, தன் தேசிய இனத்தின்வழி தான் இந்தியன் என்பதாகக் கட்டாயத்தின் பெயரால் பதிந்துகொள்ளுகிற அடிமைப் போக்கை வைத்துக்கொண்டு, மாநில சுயாட்சிக்குப் போராடுவதாகச் சொல்வது வேடிக்கையானது...

ஆக, 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்பது முழுக்கமுழுக்க இந்திய அரசுக்கு அடிமைப்பட்ட முழக்கமே அல்லாமல் வேறல்ல. அதனால்தான், அந்த முழக்கத்தை முன்னிறுத்திய தி.மு.க தங்களை **மொழியால் தமிழன், இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன்** என அடையாளப் படுத்திக்கொண்டது. அவ்வகையில் அந்த முழக்கத்தைக் கொண்டு இந்திய அரசமைப்பை, பார்ப்பனியத்தை, வல்லரசியத்தை அதனால் வீழ்த்திவிட முடியாது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆக, மாநில சுயாட்சி என்பது, இந்த வகையில் தமிழக அளவில் குமுக, அரசியல், பொருளியல் வழிப்பட்ட மாற்றத்தைத் தருவதற்கான முழக்கமில்லை என்று உணர்வோம்.

## தன்தீர்வு (சுயநிர்ணய) உரிமை

அடுத்து, சுயநிர்ணய உரிமை குறித்துப் பார்ப்போம். அதற்குமுன்பாக, மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியிலிருந்து வெளியேறித் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக்கட்சியைக் கட்டமைத்த தோழர் பெ.மணியரசன் உள்ளிட்டவர்கள் தொடக்கத்தில் முன்வைத்த முழக்கம், **'தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுப்போம்! தமிழ்த்தேச வரலாற்றில் புதுயுகம் படைப்போம்!'** - என்பது.

அந்த வகையில் தன்னுரிமை என்கிற சொல்லாடலுக்கு ஓர் அரசியல் விளக்கத்தை அவர்கள் அறிமுகப்படுத்தி அறிவித்தனர்.

நான்கு அதிகாரங்களை நடுவ ஆட்சி வைத்திருக்க வேண்டும் என்பதாகவும், அனைத்து மொழிகளையும் ஆட்சிமொழியாக்குவது என்பதாகவுமே தன்னுரிமைக்கு விளக்கம் சொல்லப்பட்டது.

தன்னுரிமை என்பது தன்னாட்சி என்கிற சுயாட்சி உரிமைக்கு அதிகப்படியானது என்பதாக அவர்கள் விளக்கம் அளித்தனர்.

ஆனால், அது அத்தகையது அல்ல. சுயாட்சிக்கு என்னென்ன அதிகாரங்கள் இருப்பதாகத் தி.மு.க குறிப்பிட்டதோ, அதே அதிகாரங்களைத்தான் தன்னுரிமை என்கிற பெயரில் இவர்கள் குறித்தனர். எனவே, அது தொடர்பான நீண்ட தருக்கத்தை அவர்கள் அதன்மூலம் எதிர்கொண்டனர்...

அதன்பிறகு பல ஆண்டுகள் கழித்து, தன்னுரிமை என்கிற சொல்லாடலைத் தவிர்த்து, **தமிழ்த்தேசக் குடியரசை அமைப்போம்!** - என்கிற வகையில் புதிய நிலைப்பாட்டிற்குரிய முழக்கத்திற்கு வந்தனர்.

தன்னுரிமை என்கிற சொல்லாடல் சுயநிர்ணய உரிமை என்கிற சொல்லாடலோடு பொருத்திப் பார்க்கிற செய்தி கொண்டதல்ல என்பதையும், தன் தீர்வுரிமை என்பதே சுயநிர்ணய உரிமை என்பதற்கான பொருளை விளக்கப்படுத்துகிற தமிழ்ச் சொல்லாக இருக்க இயலும் என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

தன்தீர்வு உரிமை என்பது நான்கு அதிகாரங்களாகச் சொல்லப்படும் அதிகாரங்களையும் நடுவ அரசுக்கானது என்றல்லாமல் தனக்கேயான உரிமைகளாகப் பெற்றிருப்பது...

அதாவது, படைத்துறை, நாணய அச்சடிப்பு, உள்நாட்டுத் தொடர்புகள், அயலுறவுத் தொடர்புகள் - ஆகிய நான்கு அதிகாரங்கள் உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களையும் மொழித் தேச அரசுகளே, அதாவது மாநில அரசுகளே அவ்வவற்றிற்குத் தனித்தனியாகக் கொண்டிருக்குமானால் அதைத் தன்தீர்வு உரிமை என்று அழைக்கமுடியும். அதாவது, ஒற்றை நடுவக் கூட்டரசுக்குள், தாங்கள் விரும்புகிற

போது, அல்லது தங்களுக்குத் தேவைப் படுகிற பொழுது, தாங்கள் அவ்வாறான தன்தீர்வு (சுய நிர்ணய) அதிகாரம் படைத்த அரசை அமைத்துக் கொள்ள முடியும் என்பதே தன்தீர்வு உரிமை அரசு என்று பொருள்படும் ... அத்தகைய அரசை ஒரு மொழி மாநிலம் அமைத்துக் கொள்ளுகிற உரிமையைப் பெற்றிருக்க வேண்டும் என்றால், அதற்கு இசைகிறபடியான ஒரு நடுவ அரசை அது பெற்றிருக்க வேண்டும்... அப்படியான ஒரு நடுவ அரசை இந்திய அளவில் உருவாக்க வேண்டு மென்றால், மொழித் தேச மாநிலங்கள் எல்லாம் சேர்ந்து மிகப்பெரும் புரட்சியின் வழியாகத்தான் அத்தகைய நடுவ அரசை அமைக்க முடியும்...

இங்கு, இந்தியாவில் உள்ள சிக்கலே, இந்திய அளவில் ஒரு புரட்சி மாற்றத்தை செய்துவிட முடியாது என்பதே ஆகும்.

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மொழித்தேசமும் ஒவ்வொரு வகைக் குமுக, அரசியல், பொருளியல், பண்பாட்டியல், வரலாற்றியல் தன்மைகளைக் கொண்டது. அப்படியான நிலையில் ஒவ்வொரு மொழித்தேசத்தின் அரசியல், பொருளியல், குமுக வியல் உரிமைத் தேவைகளும் ஒவ்வொரு வகைப் பட்டனவாக உள்ளன. ஒரு மொழித்தேசத்தின் தேவைக்காக இன்னொரு மொழித் தேசம் துணை நின்றோ, இணைந்தோ போராட முடியாது...

அப்படி இருக்கிறபொழுது இந்திய அளவில் இருக்கிற ஏறத்தாழ முப்பதுக்கும் மேற்பட்ட மொழித்தேசங்களெல்லாம் ஒரே காரணத்திற்காக ஒருங்கிணைந்து போராடுகிற வாய்ப்பிழந்து இருக் கின்றன. இத்தகைய நிலைதான் இன்றைக்கு இருக்கக் கூடிய அதிகார வகுப்புகளான பன்னாட்டு நிறு வனங்களுக்கும், இந்தியப் பார்ப்பனியங்களுக்கும், இந்திய முற்றாளுமை முதலாளியத்திற்கும் பெருத்த வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்...

அகில இந்திய அளவில் ஒரே திட்டத்தின்கீழ், ஒரே கட்சியின்கீழ்ப் புரட்சிக்கோ, குமுக மாற்றத் திற்கோ வழியில்லாத சூழலில் அனைத்து மொழித் தேசங்களுக்கும் தன்தீர்வு (சுயநிர்ணய) உரிமையை அளிக்கிற வகையான ஒரு புரட்சி வழிபட்ட நடுவ அரசை இந்திய அளவில் அமைப்பது என்பது கற்பனையானதே.

அப்படியான நடுவ அரசை அமைப்பதற்கான சூழல் இல்லாத நிலையில், சுயநிர்ணய உரிமை என்கிற தன்தீர்வு உரிமையைக்கொண்ட மொழித் தேசிய இன அரசுகளை உருவாக்க இயலாது என் பதில் நாம் தெளிவடைந்தாக வேண்டியிருக்கிறது...

இந்நிலையில், மாநிலத் தன்னாட்சி (சுயாட்சி) என்பதையும், தன்தீர்வு (சுயநிர்ணய) உரிமை என் பதையும் நோக்கித் தமிழகம் தன் அரசியல் வழித் தடத்தை மேற்கொள்ள இயலாது என்றும், அவ் வாறு மேற்கொண்டால் அதை அந்த இலக்கு நோக்கி, அதாவது தமிழக மக்கள் உரிமைகளை விடுதலையை நோக்கிச் செயல்படுத்திட முடியாது என்றும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

**ஆக, தனிநாட்டு உரிமை என்பதே தமிழ்த் தேசியத் திற்கான முழுத் தீர்வு உரிமையாக இருக்க முடியும்...**

தனிநாட்டு உரிமை என்பது இந்திய அளவில் நடுவாக ஓர் அரசை அமைத்து, அதிலிருந்து உரிமை களைப் பெற்றுக்கொள்வது என்ற நடைமுறையைக் கொண்டதன்று. முழுக்க முழுக்கத் தனக்கான ஒரு குடியரசு அமைப்பை நிறுவுவதற்கான முழு அதிகாரத்தைப் பெற்றிருப்பது. அந்த வகையில் தமிழக அளவில் தனித்த ஒரு குடியரசு அமைப்பை நிறுவுவதற்கான முழு அதிகாரத்தையும் படைத் திருப்பது. அப்படியாகத் தமிழக அளவில் ஒரு குடியரசை அமைத்திடவேண்டும் என்றால் தமிழக அளவில் குமுக, அரசியல், பொருளியல் மாற்றத் திற்கான புரட்சி வழிப் போராட்டத்தை முன் னெடுத்து முழு விடுதலை பெற்ற ஓர் அரசை நிறுவுவது என்பதே அடிப்படையானது.

அப்படிச் சொல்வதிலிருந்து, நம்முடைய ஒவ் வொரு சிறு கோரிக்கைகளுக்கும் தனி நாட்டு உரிமையே தீர்வென்றும், அந்தந்த சிறு கோரிக்கை களுக்கும் போராட மறுத்திடுவதுதான் வழியென்றும் பொருளில்லை.

தெருவிளக்குகள் ஏன் எரியவில்லை, ஏரிகளில் ஏன் தண்ணீர் இருப்பு வைத்திருக்கவில்லை என் றால் அதற்குத் தனிநாடு கிடைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்பது விடையன்று... ஆனால் அச் சிக்கலை - தெருவிளக்குகள் எரியாததுபோன்றும் ஏரிகளில் தண்ணீர் நிறையாதது போன்றதுமான தனிச் சிக்கலாகப் புரிந்துகொள்ளக் கூடாது...

தமிழ்த்தேசம் நசுக்கப்படுகிறது, உழவும், உழவு சார்ந்த சிற்றூர்களும் புறக்கணிக்கப்படுகின்றன, சிறுவணிகம் புறக்கணிக்கப்படுகிறது, தமிழ்த்தேச முதலாளியம் நசுக்கப்படுகிறது. எனவே அந்த வகை யில் இவற்றுக்கான காரணங்களுக்காக, அவற்றி லிருந்து விடிவுபெறுவதற்காகப் பன்னாட்டு மூல முதலீடுகளிலிருந்து, இந்திய வல்லாட்சியிலிருந்து விடுதலையடைந்தாக வேண்டும் என்கிற அரசிய லோடு இணைத்துப் புரிந்துகொள்ள வேண்டும்...

இந்த வகையில், தமிழக மக்களின் உரிமைக்குத் தனிநாட்டு உரிமை அரசியலே சரியான தீர்வு என்பதை உணர்தல் வேண்டும்.

❖

# இந்துத்துவமும் வன்முறையும்

❍ கண.குறிஞ்சி

**உ**லகில் எல்லா உரிமைகளுக்கும் தாயாகக் கருதப்படுவது, கருத்துரிமையாகும். ஏனெனில், மற்ற உரிமைகளைக் கோரிப் பெறுவதற்குக் கருத்துரிமைதான் வழிவகுத்துத் தருகிறது.

கருத்துரிமை இல்லாவிட்டால், ஒருவர் தனக்கான அல்லது மக்களுக்கான உரிமையை வென்றெடுக்க முடியாது. அதற்கான நியாயத்தை முன்னிறுத்தி மக்களைத் திரட்டவும் முடியாது.

கருத்துரிமை என்பது சனநாயக விழுமியங்களின் சிறந்த வெளிப்பாடாகத் திகழ்வதால், கருத்துரிமையை உயர்த்திப் பிடிக்காத அறிஞர்களை வரலாற்றில் நாம் காணமுடியாது.

“ஒரே ஒரு மனிதரைத் தவிர, உலகம் முழுவதும் ஒரே கருத்தினைக் கொண்டதாகவும், அந்த ஒரு மனிதர் மட்டும் மாற்றுக் கருத்துக் கொண்டவராகவும் இருந்தால்கூட, மனிதகுலம் அந்த ஒருவரை வாயடைக்கச் செய்வது ஒரு சிறிதும் நியாயம் இல்லை. மாறாக, அந்த ஒரு மனிதரின் கருத்து, உலகம் முழுவதையும் வாயடைக்கச் செய்யும் வலுவுள்ளதாக இருந்தால், அந்தக் கருத்தை வெளிப்படுத்துவதற்கு நியாயம் இருக்கவே செய்கிறது” என்றார் ஜே.எஸ்.மில் எனும் அறிஞர்.

“நீ சொல்வதை ஒரு சிறிதும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால், எனக்குப் பிடிக்காத அந்தக் கருத்தைச் சொல்வதற்கான உரிமையை உனக்குப் பெற்றுத் தருவதற்காக நான் உயிரையும் கொடுப்பேன்” என்றார் புரட்சி எழுத்தாளர் வால்டேர் .

எவ்வளவு பெரிய சனநாயகப் பண்பு இது! ஒரு சீரிய சமுதாயத்தின் அடையாளம் இப்படித்தான் இருக்க முடியும்.

அதனால்தான் *1948*-ஆம் ஆண்டில் வெளியிடப் பட்ட பன்னாட்டு மனித உரிமைப் பிரகடனத்தின் பிரிவு-*18* “ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்துக்களைப் பேச்சு மூலமோ, எழுத்து மூலமோ வெளிப்படுத்த உரிமை உண்டு” எனப் பறை சாற்றுகிறது.

அதேபோல், இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு *19*(அ) “சுதந்திரமாகச் சிந்திப்பதற்கும், எடுத்துச் சொல்வதற்கும் இந்தியாவில் யாவர்க்கும் உரிமை உண்டு” என வலியுறுத்துகிறது.

ஆனால் இத்தகைய கருத்துரிமை, அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு எப்பொழுதுமே எரிச்சலை உண்டாக்குவதாகவே இருக்கிறது.

தொண்டையில் சிக்கிய முள்ளாகத்தான் இந்த உரிமையை அவர்கள் கருதுகின்றனர். அதனால் அந்தக் கருத்துரிமையை முற்றாக அழிக்க எண்ணுகின்றனர்.

தங்களது மேலாதிக்கத்திற்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய கருத்துக்களை அழிப்பதில், கருத்தாளர்களை அழிப்பதில் மதத்திற்கு மிகப்பெரும் பங்குண்டு என்பதை வரலாறு நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

தான் உண்மையெனக் கருதிய கருத்துக்களை எடுத்து உரைத்ததற்காகப் பிரான்சு நாட்டின் ஜோன் ஆப் ஆர்க்;

பூமி, சூரியனைச் சுற்றுகிறது என்று வலியுறுத்தியதற்காக இத்தாலியைச் சார்ந்த புரூனோ;

கத்தோலிக்கக் கிருத்துவ மதத்திற்கு எதிராக (பிராட்டஸ்டன்டு) மத நம்பிக்கையைப் பின்பற்றியதற்காக இராபர்ட் டிரேக் - ஆகியோர் எரித்தே கொல்லப்பட்டதை வரலாறு குறிப்பிடுகிறது. அதேபோல் நவீன இயற்பியலின் தந்தை என அழைக்கப்படும் கலீலியோ, மத நம்பிக்கைக்கு எதிரான கருத்தை வெளிப்படுத்தினார் என்பதற்காக இத்தாலியில் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைக்கப்பட்டார்.

வன்முறையை ஏவுவதில் மதங்களுக்கு இடையே வேறுபாடு கிடையாது என்பதை வரலாறு நமக்குத் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறது.

இசுலாமிய மதத்தைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரில் தாலிபன்கள் நடத்தும் படுகொலைகளை இன்றைய காலக்கட்டத்தில் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம்.

ஐ.எஸ் அமைப்பு, வன்முறையையே தன் வழி முறையாகக் கொண்டு இயங்கி வருவது கண்கூடு.

அதேபோல், தமிழகத்திலும் எண்ணற்ற சமணர்கள், சைவ சமயத்தினரால் கழுவேற்றப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர் என்பதை அனைவரும் அறிவர்.

இத்தகைய கொடிய அதிகாரத்தின் உச்சமாக, கருத்துரிமையை மறுக்கும் ஆதிக்கச் சக்தியாக இன்றைய இந்துத்துவம் விளங்குகிறது. தேசிய இனங்களின் தனித்தன்மை, மாற்றுக் கருத்தை அங்கீகரிக்கும் சனநாயகம் போன்றவற்றை ஒரு சிறிதும் ஏற்காத, பொறுத்துக் கொள்ளாத பாசிசக் கொடியவர்களாகத்தான் உள்ளனர், சங்பரிவாரைச் சார்ந்தவர்கள். கருத்துரிமை என்ற சொல்லைக் கெட்ட வார்த்தையாகக் கருதுபவர்கள் இவர்கள். தமது மத மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக, வன்முறையின் எந்த எல்லைக்கும் செல்லக் கூடியவர்கள். இவர்களின் வன்முறைப் பட்டியல் மிக நீண்டது. இருப்பினும், ஒரு சிலவற்றையேனும் ஆதாரமாகப் பதிவு செய்யவேண்டியது சனநாயகக் கடமையாகும்.

1992 திசம்பர் 6 அன்று உத்தரபிரதேசம் அயோத்தியில் உள்ள பாபர் மசூதியை இந்துத்துவக் குண்டர்கள் தகர்த்தெறிந்தனர். இதையொட்டி நடைபெற்ற கலவரங்களில் பல்லாயிரக் கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர்.

கிரகாம் ஸ்டூவர்ட் ஸ்டெய்ன்ஸ், ஆஸ்திரேலியாவைச் சார்ந்த கிருத்துவப் பாதிரியார். அவர் ஒடிசாவிலுள்ள பழங்குடி மக்களிடையே மருத்துவப் பணி ஆற்றி வந்தார். 1999-ஆம் ஆண்டு. சனவரி 23-ஆம் நாள் நள்ளிரவில் அவரும், 10 மற்றும் 6 வயதான அவரது இரண்டு மகன்களும் வாகனத்தில் உறங்கிக் கொண்டிருந்த பொழுது, இந்துத்துவ அமைப்பான “பஜ்ரங்தள்”ளைச் சார்ந்த சுமார் 50 காடையர்கள் அவர்கள் மூவரையும் உயிரோடு தீ வைத்து எரித்துச் சாம்பலாக்கினர். தீயிலிருந்து தப்ப முயன்ற சிறுவர்களைக் கொடூரமாகத் தாக்கி எரிந்து கொண்டிருந்த தீயில் தூக்கி எறிந்தனர். ஸ்டெயின்ஸ் மதமாற்றம் செய்ய முயன்றதால் கொன்றோம் என இந்தப் படுகொலையை நியாயப் படுத்தினர், இந்துத்துவவாதிகள்.


அதேபோல், 2002-ஆம் ஆண்டில் கோத்ரா தொடர்வண்டி எரிப்பைத் தொடர்ந்து நடைபெற்ற கலவரத்தில், பல்லாயிரக் கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர். குறிப்பாக முசுலீம்கள் குறிவைத்துக் கொல்லப்பட்டனர். அப்பொழுது குஜராத்தில் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி, இத்தகைய படுகொலைகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டார் என அவருக்குக் கீழ் பணிபுரிந்த அதிகாரிகளே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தனர். அசீமானந்தா என்பவன் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் முக்கியத் தலைவனாக இருந்தவன். பல்வேறு குண்டுவெடிப்புகளில் தொடர்புடைய இவன், எப்படி வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகிறோம் என்பதை வழக்கு மன்றத்தில் ஒப்புதல் வாக்கு மூலமாகவே தந்திருக்கிறான். தவிரவும், முசுலீம்களின்மீது தாக்குதல் தொடுக்க ஆர்.எஸ்.எஸ் அமைப்பிலுள்ளவர்களை ஆயத்தப்படுத்தியதையும் ஒப்புக் கொண்டு உள்ளான்.

தனது சனாதனக் கோட்பாட்டை விமர்சிப்பவர்களை இந்துத்துவவாதிகள் மன்னிப்பதே இல்லை. அகிம்சை - சமாதானம் எனக் கூறிக்கொண்டே, கமுக்கமாகச் சனநாயகச் செயல்பாட்டாளர்களைத் தீர்த்துக்கட்டுவதில் வல்லவர்கள். தங்களது கருத்துக்கு மாற்றுக் கருத்தைக் கூறினர் என்பதற்காகவே நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே, எம்.எம். கல்புர்கி, கௌரி லங்கேஷ் ஆகியோரைக் குரூரமாகக் கொன்று வஞ்சம் தீர்த்துக் கொண்டனர்.

நரேந்திர தபோல்கர், மராட்டியத்தில் மருத்துவராகப் பணியாற்றிக் கொண்டே, மக்கள் பணி ஆற்றி வந்தவர். மந்திரம், சித்து வேலை, பேய் ஓட்டுதல், மூடநம்பிக்கை, சாமியார்களின் ஏமாற்று வேலை ஆகியவற்றைத் தொடர்ந்து அம்பலப் படுத்தி வந்தார். மராட்டியச் சட்டமன்றத்தில் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப் பெரிதும் பாடுபட்டார். சுமார் 3,000 பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டு பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்புரை செய்தார்.

இந்நிலையில் 2013 ஆகத்து திங்களில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தோழர் கோவிந் பன்சாரே, ஒரு வழக்குரைஞர். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மராட்டிய மாநிலப் பொதுச்செயலாளராகப் பணியாற்றியவர். “சாதி மறுப்பு, மதமறுப்புத் திருமண ஆதரவு மையம்” எனும் அமைப்பை உருவாக்கி, எண்ணற்ற சாதி மறுப்புத் திருமணங்களை நடத்தி வைத்தவர். முற்போக்குக் கருத்துக்களைப் பரப்பிட 21 நூல்களை எழுதி வெளியிட்டார். சோதிராவ் பூலே, சாகு அரசர், அம்பேத்கர் ஆகியோரின் கருத்துக்களை மராட்டியம் முழுவதும் எடுத்துச்சென்றார்.



சிவாஜியை முசுலீம்களின் பகைவனாகவும், பசு - பார்ப்பனக் காவலனாகவும் இந்துத்துவவாதிகள் பொய்ப் பிரச்சாரம் செய்து வருவதை அம்பலப் படுத்த, “சிவாஜி யார்?” எனும் நூலை எழுதி வெளி யிட்டார். அந்நூல் 2,00,000 படிகள் விற்பனை யாகி மிகப்பெரும் சாதனை படைத்தது. அந் நூலில் சிவாஜி, முசுலீம்களை எந்த அளவு ஆதரித்து வந்தார் என்பதை எண்ணற்ற சான்றுகள் மூலம் மெய்ப்பித்தார். இந்துத்துவத்திற்கு எதிரான கருத் துக் கொண்டவராக இருந்ததால், தோழர் கோவிந் பன்சாரே 2015 பிப்ரவரி 20-ஆம் நாள் துப்பாக்கி யால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பேராசிரியர் கல்புர்கி, கன்னடப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராகப் பணி ஆற்றியவர். 103 நூல்களும், 400 கட்டுரைகளும் படைத்த இவர், சாகித்திய அகாதமி விருதுபெற்ற சிறந்த படைப் பாளியாவார். சிறந்த பகுத்தறிவாளராகவும், நாத்திக ராகவும் விளங்கிய கல்புர்கி, உருவ வழிபாடு, பொருளற்ற சடங்குகள், சாதிப் பாகுபாடு ஆகிய வற்றை எதிர்த்துத் தீவிரமாகப் போராடி வந்தார்.

அதனால், 2015 ஆகத்து 30-ஆம் நாள் துப்பாக்கி யால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

கௌரி லங்கேஷ், மிகச்சிறந்த பத்திரிகையாளர். பெண் உரிமைப் போராளி. சாதிகளை எதிர்த்துப் போராடி வந்தார். கர்நாடகத்தில் இந்துத்துவ வாதிகள் செய்யும் அட்டூழியங்களைத் தொடர்ந்து ஊடகத்தில் வெளிப்படுத்தி வந்தார்.

அதனால், 2017 செப்டம்பர் 5-ஆம் நாள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். கருத்துரிமை காப் பதற்காகப் போராடிய தபோல்கர், பன்சாரே, கல்புர்கி, கௌரி லங்கேஷ் ஆகியோரைப் படு கொலை செய்ததற்காக, “சனாதன் சன்சதா” எனும் கொடிய இந்துவ அமைப்பைச் சார்ந்தவர்கள் தற்பொழுது கைது செய்யப்பட்டுள்ளனர். சனாதன் சன் சதா எனும் இந்துத்துவ அமைப்பு, 1990-ஆம் ஆண்டு ஜெயந்த் அதாவேல் என்பவரால் மராட் டிய மாநிலத்தில் உருவாக்கப்பட்டது. கோவாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் இந்த அமைப்பு தனது அணிகளுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து வந்தது. அமோனியம் நைட்ரேட்டு போன்ற வெடிமருந்துகளைப் பெருமளவு அந்த அமைப்பினரிடமிருந்து காவல்துறை கைப்பற்றியது குறிப்பிடத் தக்கது. இருப்பினும், தனது சதித் திட்டத்தையும், கொலைப் பயணத்தையும் அது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

2015 செப்டம்பர் 28 இரவு உத்தரப் பிரதேச தாத்ரி கிராமத்தில் முகமது அக்லக், பசு இறைச்சி -யை அவரது வீட்டில் வைத்திருந்ததாகக் கூறி, இந்துத்துவக் காடையர்கள் அவரை அடித்தே கொன்றனர். ஆனால், அவர் வைத்திருந்தது ஆட்டு இறைச்சிதான் எனப் பிறகு சோதனையில் தெரிய வந்தது. அக்லக்கைக் கொன்ற கொலையாளி சிறையில் அடைக்கப்பட்டு இயல்பாக இறந்த பொழுது, அவனை ஒரு தியாகிபோலக் கொண்

டாடினர். அது மட்டுமல்லாமல், அரசிடமிருந்து பல இலட்சக்கணக்கான ரூபாய்களை அவனது குடும்பத்தினருக்கு இழப்பீடாகப் பெற்றுத் தந் தனர், இந்துத்துவ ஆதரவாளர்கள்.

ஆனால், அக்லக் படுகொலையை நேர்மையாக விசாரணை செய்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித் தந்த காவல்துறை அதிகாரி சுபோத் குமார், அண்மையில் இந்துத்துவவாதிகளால் குறி வைத்துப் படுகொலை செய்யப்பட்டார் .

“தயவுசெய்து மத வேற்றுமைகளை ஊக்குவிக் காதீர்கள்” எனத் தனது தந்தையைக் கொன்ற மத வெறியர்களை சுபோத்குமாரின் மகன் உருக்கமாக வேண்டிக்கொண்டார் என்பது கருதத்தக்கது.

இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதி களில் செயல்பட்டுக்கொண்டிருந்த சமூகச் செயல் பாட்டாளர்களான சுதா பரத்வாஜ், வரவர ராவ், கௌதம் நவ்லாகா, அருண் பெரைரா மற்றும் வெர்னான் கொன்சால்வஸ் ஆகியோர் திடுமென *2018* ஆகத்து *28*-ஆம் நாளன்று ஒரே சமயத்தில் கைது செய்யப்பட்டனர். பிரதமர் மோடியைப் படுகொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினர் எனும் பொய்யான காரணத்தைச் சுமத்தி, அறிவுத் தளத் தில் செயல்படும் இவர்கள் மீது பொய் வழக்குகள் புனையப்பட்டன. கருத்துரிமை காக்கும் போராளி களாக இன்று இவர்கள் சிறையில் வாடுகின்றனர்.

டி.எம்.கிருஷ்ணா, சிறந்த கர்நாடக இசைப் பாடகர், எழுத்தாளர், சமூகச் செயல்பாட்டாளர். சுற்றுச்சூழல், சாதியக் கட்டமைப்பு, மதவாதம் போன்ற பல்வேறு சிக்கல்களில் ஆக்க வழியிலான குறுக்கீடுகளைச் செய்துவருபவர். சிறந்த கர்நாடக இசைக்கலைஞராகக் கொண்டாடப்படும் எம்.எஸ். சுப்புலட்சுமி, மிகப் பரவலான செல்வாக்கைப்பெற ஒரு எடுத்துக்காட்டான பார்ப்பனப் பெண்ணைப் போல நடை, உடை, பாவனைகளை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது எனவும், பார்ப்பன ரல்லாத அவர், இதற்காகத் தனது குடும்பத்தின ரிடமிருந்து கூடச் சற்றே விலகியிருக்க நேர்ந்தது எனவும், அவர் கறுப்பு நிறத்தில் இருந்திருந்தால், இவ்வளவு புகழ் கிடைத்திருக்குமா எனவும் ஐதரா பாத்தில் **2017** நவம்பர் **24** அன்று நடந்த ஒரு நிகழ்ச்சியில் டி.எம்.கிருஷ்ணா கேட்டதால், மிகக் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானார்.

தவிரவும், அவர் கிருத்துவ மற்றும் இசுலாமியப் பாடல்களை மேடையில் பாடக்கூடாது எனவும் இந்துத்துவவாதிகள் எச்சரித்தனர். ஆனால் அவர் களின் மிரட்டலைப் பொருட்படுத்தாமல், அவர் அனைத்து மதப் பாடல்களையும் மேடையில் தொடர்ந்து பாடிவந்தார். இதனால் எரிச்சலடைந்த இந்துத்துவ வாதிகள், இவரது இசைக் கச்சேரி அமெரிக்காவில் நடைபெற்றாலும், அங்கும் இவ ருக்கு எதிராகக் கலகங்களைக் கட்டவிழ்த்து விடு கின்றனர்.

இசை என்பது சாதி, மதம் கடந்தது என்பதை இந்துத்துவ சக்திகள் ஏற்பதற்கு அணியமாக இல்லை என்பதைத்தான் இத்தகைய எதிர்ப்புகள் நமக்கு உணர்த்துகின்றன.

இராமச்சந்திர குகா, புகழ் பெற்ற வரலாற்றுப் பேராசிரியர் ஆவார். முற்போக்குச் சிந்தனையாள ரான இவர், மாட்டிறைச்சி உணவைச் சாப்பிட்ட தாக அண்மையில் முகநூலில் பதிவு செய்திருந்தார்.

அதற்கு ஆர்.கே.யாதவ் எனும் இந்துத்துவ ஆதரவாளன் ஒருவன், “இந்துவாக உள்ள ஒருவர் மாட்டிறைச்சியைச் சாப்பிடுவதும், அதை வெளிப் படையாகக் கூறுவதும் மதத்தைக் களங்கப்படுத்து வதாகும். இராமச்சந்திர குகா இதன்மூலம், ஒட்டு மொத்த இந்துக்கள் அனைவரையும் கேலி செய்வ தாகத்தான் கருதுகிறேன். இவருக்குத் தக்க பாடம் புகட்ட வேண்டும்” என முகநூல் மூலம் பொங்கி யுள்ளான்.

அதன் பிறகு, அவருக்கும், அவரது துணைவி யாருக்கும் தொலைபேசி மூலம் தொடர்ந்து அச் சுறுத்தல் வந்துகொண்டிருக்கிறது என்று இராமச் சந்திர குகாவே தெரிவிக்கிறார்.

இப்படி எங்கும் இந்துத்துவம், எதிலும் இந்துத் துவம் என்ற வெறிக்கூச்சல் நம் காலத்தில் அதிக மாகிக் கொண்டிருக்கிறது.

கருத்துரிமை பறிப்பு - வெறுப்பு அரசியல், அதன் விளைவாக வன்முறை எனும் நச்சு வலை நாடெங்கும் இன்று விரிக்கப்பட்டு வருகிறது. இதை அனுமதித்தால் எதிர்காலம் முற்றிலும் இருண்டுவிடும்.

“சிறிய பாம்பாயினும், பெரிய தடி கொண்டு அடி” என்பது பழமொழி. எனவே, இந்துத்துவச் சனாதனக் கோட்பாட்டை வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழித்தாலன்றி, தமிழகம் தன் விழுமியங்களைப் பாதுகாக்க முடியாது.

**இந்துத்துவத்தை ஒழிப்பதுதான் இன்று முதல் வேலை.**

**வேறெந்த வேலையும் செய்யலாம் நாளை.**

❖

# இந்தியாவிற்காகத் தமிழகத்தைக் காவு கேட்கும் ஹைட்ரோ கார்பன் திட்டங்கள்

## பாஜக – அதிமுக–வின் சித்து விளையாட்டுகளும் வேடிக்கைப் பார்க்கும் தமிழக ஓட்டுக் கட்சிகளும்

❍ சுப்பு மகேசு

ஆசியாவிலேயே மிகப்பெரிய படுகையான காவிரிப் படுகை, தமிழகத்தின் 80% உணவுத் தேவைகளை நிறைவு செய்து வருகிறது. தஞ்சை திருவாரூர் மாவட்டங்களும் மற்றும் கடலூர் மாவட்டம் உள்ளடக்கி பாண்டிச்சேரி வரை சுமார் 8 இலட்சம் ஹெக்டேரில் பரந்து விரிந்து கிடக்கும் காவிரிப் படுகையில் 1 கிலோ மீட்டர் சுற்றளவில் பல கிராமங்கள் இருப்பதை உலகில் எங்கும் காணமுடியாது.

1993-இல் காவிரிப்படுகையில் மண்ணெண்ணை எடுப்பதாக வந்த இந்திய எண்ணை நிறுவனமான ஓ.என்.சி.சி, மீத்தேன் உள்ளிட்ட ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கான தொடக்கப் பணிகளை மேற்கொண்டது. இது தமிழகத்தின் காவிரிப் படுகை மக்களுக்குத்தெரியாது.

புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் சுற்று வட்டங்களில் ஓ.என்.சி.சி நிறுவனம் ஆயில் எடுப் பதாகக் கூறி 2006-ஆம் ஆண்டு நிலங்களைக் கேட்டதாகவும், 2007-ஆம் ஆண்டு விவசாயி களைக் கட்டாயப்படுத்தி 1 ஏக்கருக்கு மாதத்திற்கு 17 ஆயிரம் இழப்பீடு தருவதாகச் சொல்லி நிலங் களைக் கையகப்படுத்தியதாகவும் கூறுகிறார்கள், 129 நாட்களாகப் போராட்டம் நடத்தி வரும் புதுக்கோட்டை மாவட்ட மக்கள்.

மத்தியில் ஆட்சியிலிருந்த காங்கிரசு அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், ‘தி கிரேட் ஈச்டெர்ன் எனெர்ஜி கார்ப்பரேஷன்’ என்ற அமெரிக்க நிறுவனத்திற்கு திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல், வலங்கை மான், நீடாமங்கலம், மன்னார்குடி வட்டங்களும் தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர், கும்ப கோணம், ஒரத்தநாடு, பாபநாசம் ஆகிய வட்டங் களில் சுமார் 1,66,210 ஏக்கரில் மீத்தேன் எடுக்க 29.7.2010-இல் உரிமம் வழங்கியது. அப்போது தமிழகத்தில் ஆட்சியிலிருந்த தி.மு.க அரசு இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒப்புக்கொண்டு 4.1.2011-இல் அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டது.

இப்போது ‘ஹெல்ப்’ எனப்படும் ஒற்றை உரிமம் திட்டத்தில் அந்நிய நேரடி முதலீட்டில் இந்தியா முழுவதும் 55 புதிய வட்டாரங்களில் ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கான அனுமதியை வழங்குவதற் கான நடைமுறைகள் 2018 சனவரி 19-ஆம் நாள் தொடங்கி நடைபெற்றுவருகின்றன. இதன் அடிப் படையில் 55 வட்டாரங்களில் மொத்தம் 59,282 ச.கி.மீ பரப்பளவில் முதல் கட்டமாக 1000-க்கும் மேற்பட்ட கிணறு அமைக்க ஏலம் விடப்பட உள்ளது.

இதில் தமிழகத்தில் முதல் கட்டமாக காவிரி டெல்டாவில் 3 இடம். இதற்கான அனுமதியில் மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அக்டோபர் 1-ஆம் தேதி மீண்டும் கை யொப்பமிட்டுள்ளார். இதற்குமுன்னர் கடலூரில் தொடங்கி தரங்கம்பாடி வரை பெட்ரோலிய மண்டலமாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் கொடுக்கப்பட்ட மூன்று இடங் களில் ஒன்றான கடலூர் மற்றும் சிதம்பரத்தை ஓ.என்.சி.சி-க்கும், ஸ்டெர்லைட்டு ஆலைக்கு எதிராக 99 நாட்கள் அமைதியாகப் போராடிய தூத்துக்குடி மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி 13 தோழர்களைப் படுகொலை செய்த அனில் அகர்வாலின் வேதாந்தா நிறுவனத்திற்குக் கமலா புரம் உள்ளிட்ட இரண்டு இடங்களையும் ஒதுக்கி அனுமதியளித்துள்ளது. இது மோடி கும்பல்களின் நோக்கங்களை நமக்குப் பட்டவர்த்தனமாகப் புரிய வைக்கிறது. ஏற்கனவே கடலூர் மாவட்டம் பரங்கிப் பேட்டை கடல் பகுதியில் எண்ணெய் எரிவாயு எடுக்கக் கிணறுகளை அமைத்த இந்தியாவின் பொதுத்துறை நிறுவனமான ஓ.என்.சி.சி, அனைத் துப் பணிகளையும் முடித்து ஹெச்.ஓ.இ.எல் என்ற தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்துவிட்டு ஓடிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திற்கு வறட்சி நிவாரணம் மற்றும் நீட் தேர்வு விலக்கு அளிக்குமாறு பிரதமரைச் சந்திக்க முதலமைச்சர் பழனிச்சாமியோடு சென்ற அமைச்சர் ஜெயக்குமார் டெல்லியில் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பின்போது, ஹைட்ரோகார்பன் திட்டமானது விவசாயத்தைப் பாதிக்காதவண்ணம் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு பின்னர் செயல்படுத்தப்படும் எனக் கூறினார்.

தமிழகச் சுற்றுச்சூழல் அமைச்சர் கருப்பண்ணன் ஒரு படி மேலே சென்று இந்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சர் ஹர்ஷவர்த்தனைச் சந்தித்து தமிழ் நாட்டில் எண்ணெய் மற்றும் எரிவாயுக் குழாய்களைப் பதிக்கும் பணிக்காகப் பொதுமக்களிடம் கருத்துக் கேட்காமலேயே அத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கவேண்டும் எனக் கோரிக்கை மனு அளித்துள்ளார்.

மீண்டும் 2015 பிப்ரவரி 17-ஆம் நாள் 57 இடங்களில் மீத்தேன் எடுக்க அனுமதி வழங்கி இந்தியப் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் உத்தரவிட்டது.

இதனால் சர்வதேச அளவில் 128 நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தம் கோரப்பட்டது.

இறுதியாக மார்ச் 27-ஆம் நாள் 31 இடங்களில் ஹைட்ரோ கார்பன் எடுக்க ஒப்பந்தம் கொடுக்கப்பட்டு இதன் அடிப்படையில்தான் கர்நாடகவைச் சேர்ந்த ஜெம் லெபரட்ரி நிறுவனம் 2016-இல் நெடுவாசலில் ஹைட்ரோகார்பன் எடுக்க முயற்சி செய்தது. நெடுவாசல் மக்களின் நீண்ட நெடிய போராட்டத்தின் விளைவாக நெடுவாசல் ஹைட்ரோ கார்பன் திட்டத்தைக் கைவிட்டு, தமிழக அரசிடம் வேறு இடத்தை ஹைட்ரோ கார்பன் எடுக்க ஒதுக்குமாறு கோரி வருகிறது.



மக்களின் கருத்துரிமையை மறுக்கும் இந்தச் செயல்பாடுகளே, இவர்கள் கார்ப்பரேட் நிறுவனங்களின் கைக்கூலிகளாக மாறிவிட்டதையும் தமிழகத்தைக் காவுகொடுக்கத் தயாராகி விட்டனர் என்பதையும் பட்டவர்த்தனமாகத் தெரிவிக்கிறது.

ஐயா நம்மாழ்வார் அவர்களின் விழிப்புணர்வுக் கூட்டங்களும் போராட்டங்களும் "தி கிரேட் ஈச்டெர்ன் எனெர்ஜி கார்ப்பரேசன்" நிறுவனத்தை வேலை செய்யவிடாமல் தடுத்தன. காவிரிப்படுகை மக்கள், மீத்தேன் திட்டத்தின் அபாயங்களைப் புரிந்துகொள்ளத் தொடங்கினர்.

இந் நிலையில் தி கிரேட் ஈச்டெர்ன் எனெர்ஜி கார்ப்பரேசன் நிறுவனத்தின் 5 ஆண்டு உரிமம் புதுப்பிக்கப் படாத தால் 2015-இல் அந்நிறுவனம் வெளியேறியது.

ஹைட்ரோகார்பன் திட்டங்களை கைவிடக் கோரி ஹைட்ரோ கார்பன் எதிர்ப்பு இயக்கங்கள், விவசாயச் சங்கங்கள் மற்றும் மக்களின் தொடர் போராட்டங்களினால் நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தமிழகத்தில் நெடுவாசல், கதிராமங்கலம் உள்ளிட்ட எந்த இடத்திலும் மீத்தேன், ஷேல்காஸ் உள்ளிட்ட ஹைட்ரோகார்பன் எடுக்கும் திட்டங்கள் எதுவும் செயல்படுத்தவில்லை எனக் கூறியுள்ளார்.

நரேந்திர மோடி தலைமையிலான மத்திய பா.ஜ.க அரசு 2022-க்குள் உள்நாட்டு எரிபொருள் உற்பத்தியைக் கனிசமாக உயர்த்தத் திட்டமிட்டு இந்தியா முழுவதும் 65 இடங்களில் கண்டறியப்பட்ட சிறு மற்றும் நடுத்தர வயல்களைக் கடந்த பிப்ரவரி 2017-இல் ஏலம் விட்டது.

இதன்படி மத்தியப் பெட்ரோலிய அமைச்சகம் 700 இடங்களில் எரிபொருள் எரிவாயு எடுக்க அனுமதி வழங்கியுள்ளதாகவும் 4,30,000 மெட்ரிக் டன் அளவு எண்ணெய் எடுக்க ஒப்பந்தம் அளிக்கப் பட்டதாகவும் விளக்கமளித்துள்ளது.

இதில் ஒன்று தான் காவிரி டெல்டாவில் உள்ள நெடுவாசல் உள்ளிட்ட இடங்கள்.

நீரியல் விரிசல் எனப்படும் ஆபத்தான முறை யில் 2000 அடி முதல் 10000 அடி வரை துளை யிட்டு, குழாய் பதித்து அதிலிருந்து அனைத்து திசைக்கும் 2 கி.மீ தூரத்திற்குப் பக்கவாட்டில் - அதாவது 36 சதுர கிலோ மீட்டர் தூரத்திற்குக் குழாய் செலுத்தப்படும் என்பதும், அதில் மிக அபாயகரமான வேதிப்பொருட்களான ஈயம், யுரேனியம், ரேடியம், மெத்தனால் ஹைட்ரோ குளோரிக் அமிலம், பார்மால்டிசைட், பென்சீன் டொலுயீன், ஈதைல், பென்சீன் சைலீன் போன்ற 600-க்கும் மேற்பட்ட வேதிப்பொருள்களோடு 400 டன் மணல் 400 டேங்கர் லாரி தண்ணீர் கலந்து மிக அழுத்தமாகச் செலுத்தி நிலக்கரிப் பாறைகளை உடைத்தும் வண்டல்மண் பாறைகளை உடைத்தும் மீத்தேன் உள்ளிட்ட ஹைட்ரோ கார்பன் எடுப்பார்கள் என்பதும், இதனால் பல கோடிக் கணக்கான லிட்டர் நிலத்தடி நீர் உறிஞ்சப்படும் என்பதும், குழாயிலிருந்து வெளி யேற்றப்படும் கழிவு நீர், கடல் நீரைப்போன்று 5 மடங்கு உப்புத் தன்மை கொண்டதால் விளை நிலம் முற்றிலுமாக உப்பு நிலமாக மாறும் என் பதும், கழிவுநீரில் கலந்துள்ள பென்சீன், ரேடியம் போன்ற 600 வேதிப் பொருள்களினால் புற்று நோய் உள்ளிட்ட பல்வேறு தொற்றுநோய்கள் உருவாகும் என்பதும் போராடும் காவிரிப்படுகை மக்களுக்குத் தெரியும் போது, உலகம் முழுவதும் சுற்றி வரும் இந்தியாவின் பிரதமரான மோடிக் கும் அவருடைய சகாக்களுக்கும் தமிழகத்தின் முதலமைச்சர் எடப்பாடிக்கும் அவருடைய சகாக் களுக்கும் தெரியாதா?

இந்திய அரசு உலக வர்த்தக மையத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தங்களாலும், அமெரிக்கா ரஷியா போன்ற வல்லாதிக்க நாடுகளின் நெருக் கடியாலும் உலக முதலாளிகள் மற்றும் இந்தியப் பெரு முதலாளிகளான அம்பானிகள், டாட்டாக் களின் கார்ப்பரேட் நிறுவனங்கள் 35 ஆண்டுகள் மீத்தேன் உள்ளிட்ட ஹைட்ரோ கார்பன்கள் எடுக்கவும் 100 ஆண்டுகள் நிலக்கரி எடுக்கவும், காவிரிப்படுகையை அழித்துக் கனிமவளங்களைக் கொள்ளையடிக்கவும் மோடிகளும் எடப்பாடி களும் துணைபோகிறார்கள்.

இவர்கள் காவிரிப்படுகையை மட்டும் அழிக்கத் துடிக்கவில்லை.

தமிழகத்தின் பிற பகுதிகளில் கிடைக்கக் கூடிய பெட்ரோல், நிலக்கரி மற்றும் மலைகளை அறுத்துக் கிடைக்கும் கிரானைட், சுண்ணாம்புப் பாறைகள், இரும்புத் தாது, மண் படிவங்களில் கிடைக்கும் பாக்சைட், தங்கம், பிளாட்டினம், அணு உலைகளுக்குத் தேவையான மணல், தாது மணல் போன்ற கனிமவளங்களும் கடல் வளங் களும் காட்டு வளங்களும் அழிக்கப்படுவதோடு, உலக வல்லாதிக்க நாடுகளின் அனல் மின் நிலையங்களுக்காகவும் நியுட்ரினோ ஆய்வுக் கூடங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தொழில்நுட்பப் பூங்காக்களுக்காகவும் தமிழக நில வளங்களை உலக மற்றும் இந்தியப் பெரு முதலாளிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுத்து மகிழ்கிறார்கள்.

1960-இல் சோமாலியா வளமான மிகவும் செழுமையான விவசாய நாடாக இருந்தது. அம் மக்கள் சுய தேவை உற்பத்தியால் வறுமையை விரட்டியவர்கள்.

அந்த நாடு படிப்படியாக இத்தாலியர்களின் பிடியில் சென்றது. இத்தாலியும் மேற்குலக நாடு களும் தெற்கு சோமாலியாவில் கனிம வளக் கொள்ளையில் ஈடுபட்டனர்.

இன்று சோமாலியா வறுமையின் பிடியில்! சோமாலிய மக்கள் கடல் கொள்ளையர்களாக மாற்றப்பட்டனர்.

50 லட்சம் குழந்தைகள் சாவின் விளிம்பில் மண் ரொட்டி சாப்பிடும் அவலம்!

சோமாலியாவின் நிலை எதிர்காலத்தில் தமிழகத் திற்கும் வரவேண்டுமா?

இந்தியாவுக்காகத் தமிழ்நாட்டையே காவு கொடுக்க நினைக்கும் மோடிகளும் எடப்பாடி களும், வாயிருந்தும் ஊமையாய், கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் இருக்கக் கூடிய ஓட்டுக்கட்சித் தலைவர்களும் நம் மண் ணையும் நம் வாழ்வாதாரங்களையும் தமிழகத்தின் இறையாண்மையையும் காப்பாற்றுவார்களா?

**ஒருபோதும் காக்கமாட்டார்கள். நாம்தான் நமது மண்ணை நமது வாழ்வாதாரத்தை நமது உரிமையை காப்பாற்றிக்கொள்ள முடியும்.**

ஒற்றுமையான ஒன்றுபட்ட வலிமையான போராட்டமே இனி தமிழகத்தைக் காப்பாற்றும்.

❖

# ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க அனுமதி
# தமிழக - இந்திய அரசுகள் கார்ப்பரேட்டுகளின் கைக்கூலிகளே!

○ பாவெல்

**தூ**த்துக்குடியில் 1994-ஆம் ஆண்டு ஸ்டெர் லைட் தாமிர உருக்காலை வேதாந்தா நிறுவனத் தால் தொடங்கப்பட்டது. ஆலை தொடங்கப் பட்டதில் இருந்தே அதை எதிர்த்த மக்கள் போராட் டங்களும் தொடர்ந்து கொண்டே வருகிறது.

ஸ்டெர்லைட் ஆலைக்கழிவால் காற்று, நிலம், நீர், சுற்றுச்சூழல் மாசுபாடு ஏற்பட்டு ஏராளமான மரணங்கள், ஏராளமானோர் புற்று நோயால் பாதிக்கப்பட்டு மரணத்தின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அதற்குக் காரணமான ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான அந்த மக்களின் போராட்டமும் வீரிய மடைந்துகொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சி யாகவே கடந்த பிப்ரவரி மாதம் "தூத்துக்குடி யைக் காப்போம்" என அப்பகுதி மக்கள் அற வழியிலான போராட்டத்தைத் தொடங்கினர். அப் போராட்டத்தின் 100-ஆவது நாளன்று கடந்த மே 22 அன்று ஆலையை நிரந்தரமாக இழுத்து மூட வலியுறுத்தி தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கிப் பேரணியாய் திரண்டனர்.

அமைதியாக நடந்த அப்பேரணியில் ஸ்டெர் லைட் ஆலை முதலாளி அனில் அகர்வால் தூக்கிப் போட்ட எலும்புத்துண்டுகளை வாயில் கவ்விக் கொண்ட இனவிரோத - மக்கள் விரோத மத்திய அரசும் அதன் எடுபிடி எடப்பாடி தலைமையிலான தமிழக அரசும் காவல்துறையை ஏவி துப்பாக்கிச் சூடு நடத்தி 13 பேரைப் படுகொலை செய்தனர். அத் தாக்குதலில் 1000-க்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகாயமடைந்தனர்.

1919-இல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு அடுத்தபடியாக தமிழகத்தில் அனில் அகர்வாலின் வேதாந்தா கொலைக் கும்பலின் ஸ்டெர்லைட் ஆலைக் கழிவின் ஆபத்துகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள போராடிய பொதுமக்கள் மீது நடத்திய துப்பாக்கிச்சூடு மிகக்கொடூரமானது. இச் சம்பவம் இந்த நாடு ஒரு சனநாயக நாடு இல்லை; குடியரசு நாடு இல்லை; மக்களுக்கான ஆட்சியாக, அரசாக இல்லை; பெரும் ஏகபோக மூலதனக்கும்பலின் ஆதிக்கத்தின் கீழ், அதிகாரத் தின் கீழ் உள்ள சர்வாதிகார நாடு என்பதை நமக்கு மேலும் வலுவூட்டக்கூடிய செயலாகவே இருந்தது.

தமிழகத்திலும், சர்வதேச அளவிலும் பெரும் கண்டனங்களையும் ஆலைக்கு எதிரான எதிர்ப் பையும் உருவாக்கிய இந் நிகழ்விற்குப் பிறகு, மக்களின் போராட்டத்திற்குப் பிறகு, புரட்சிகர இயக்கங்களின் போராட்டங்களுக்குப் பிறகு, தமிழக அரசு ஸ்டெர்லைட் ஆலை மூடப்படுவதாக ஒப் புக்கு அறிவித்து, ஸ்டெர்லைட் நிர்வாகமும் தமிழக அரசும் இந்திய அரசும் இணைந்து நடத்திய நாடகமாக ஆலைக்கும் சீல் வைக்கப்பட்டது.

இதையே 13.06.2018 அன்று சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை, "ஸ்டெர்லைட் ஆலையை மூடும் அரசாணை தெளிவாக இல்லை" என்றும் "கொள்கை முடிவெடுத்து அறிவிக்க வேண்டும்" எனவும் யோசனை வழங்கியிருந்தது.

அதாவது, அமைச்சரவையைக்கூட்டி கொள்கை முடிவெடுத்து ஆலையை மூடத் தமிழக அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்று நீதிமன்றம் மறை முகமாகச் சுட்டிக்காட்டியது.

இதைத் தொடர்ந்து தமிழக அரசின் ஆணையை எதிர்த்து டெல்லியில் உள்ள தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தில் ஸ்டெர்லைட் ஆலை கொலைகாரக் கும்பலால் வழக்குத் தொடரப்பட்டது.

கொலைகாரக் கும்பலான வேதாந்தா நிறுவனமோ தமிழகத்தைச் சுடுகாடாக மாற்றாமல் செல்ல மாட்டேன் என்று முரண்பிடிக்கிறது. இனவிரோத இந்திய அரசும் அதற்குச் சிவப்புக்கம்பளம் விரித்து வரவேற்கிறது. தமிழக அரசோ, முதுகெலும்பு முறிக்கப்பட்டு, ஆளத் தகுதியற்றவர்கள் - வாழத் தகுதியற்றவர்களின் கூடாரமாக இருக்கிறது. பாஜக எனும் இந்துத்துவ பாசிச விசச் செடிக்கு உரமிட்டுத் தண்ணீர் ஊற்றும் எடுபிடிகளாக இருக் கின்றது. மத்திய அரசின் அடிமைகள்தாம் மாநில அரசுகள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டே இருக்கிறது தமிழக அரசு.

கடந்த ஆகஸ்ட் 9 அன்று டெல்லியில் உள்ள பசுமைத் தீர்ப்பாயம், தமிழக அரசின் உத்தரவைத் தூக்கி வீசிவிட்டு ஸ்டெர்லைட் நிர்வாகம் அள்ளி வீசிய அற்பத் தொகைகளை வாயில் கவ்விக் கொண்டு நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள ஸ்டெர்லைட் ஆலைக்கு இசைவளித்தது. அத்துடன் ஸ்டெர்லைட் ஆலையை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய மேகாலயா உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி தருண் அகர்வாலல் தலைமையில் சதீஷ்சி.கர்கோட்டி, எச்.டி.வரலட்சுமி ஆகிய 3 பேர் கொண்ட குழுவை அமைத்தது. ஆலையை ஆய்வு செய்த தருண் அகர்வால் தலைமையிலான குழு ஆய்வுசெய்த அறிக்கையைத் தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்தது. அதில்,

1. **ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுமாறு தமிழக அரசு பிறப்பித்த உத்தரவை நியாயப்படுத்த முடியாது என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ள காரணங்கள் ஆலையை மூடுவதற்கு நியாயமானவையாக அமையவில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது.**
2. **ஸ்டெர்லைட் ஆலை மீண்டும் உற்பத்தியைத் தொடங்க வேண்டும் என்று தீர்ப்பாயம் கருதும் பட்சத்தில் காற்று, நிலத்தடி நீர், சுற்றுச்சூழல், திடக்கழிவு மேம்பாடு குறித்து இந்தக் குழு வழங்கும் 25 பரிந்துரைகளை நிபந்தனைகளாக முன்வைத்து அனுமதி வழங்கலாம் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.**

இந்த அறிக்கையின் அடிப்படையில் தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் 15-12-2018 அன்று தீர்ப்பு எனும் பெயரில் தமிழக மக்களின் உயிரோடு உணர்வோடு அவர்களின் வாழ்வோடு விளையாடியிருக்கிறார்கள்.

தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவில், “ஆய்வுக் குழுவின் அறிக்கையை நிராகரிப்பதற்கான காரணங்கள் எதுவுமில்லை” என்று சொல்லியுள்ளது.

ஸ்டெர்லைட் ஆலையை மூடுமாறு தமிழக அரசும் தமிழக மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் பிறப்பித்த உத்தரவுகளை இரத்து செய்த தேசிய பசுமைத் தீர்ப்பாயம், “ஸ்டெர்லைட் ஆலையை மூடுமாறு தமிழக அரசு பிறப்பித்த உத்தரவை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிக்கவும் ஆலையை ஆய்வுசெய்ய நிபுணர் குழுவை அமைக்கவும் தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் உள்ளது” எனவும் தூத்துக்குடி மக்களின் கோரிக்கையையும், 13 பேரை நேரடியாகச் சுட்டுக் கொன்றும், நூற்றுக்கணக்கானோர் ஆலைக்கழிவால் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு உள்ளாக்கப்பட்டு ஆலையால் படுகொலை செய்யப்பட்ட பிறகும், அம் மக்களின்



அவலக் குரல்களைக் கணக்கில் கொள்ளாமல், “மீண்டும் ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்கலாம்” என்று பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவிட்டதன் மூலம், ஒரு பெரும் மூலதனக் கும்பலைப் பாதுகாப்பதுதான் இந்திய அரசின் கொள்கை என்பதை நாம் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

மேலும், பசுமைத் தீர்ப்பாய நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், தருண் அகர்வால் தலைமையிலான ஆய்வுக்குழு அறிக்கையிலுள்ள முக்கிய பரிந்துரைகளை ஸ்டெர்லைட் நிருவாகம் அமல்படுத்த வேண்டும். இதில் தமிழக மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் இணைந்து ஆலோசனை வழங்க வேண்டும்... உள்ளிட்ட நிபந்தனைகள் கொடுக்கப்பட்டுள்ள தாக அறிவித்துள்ளனர்.

தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறக்க அனுமதி வழங்கியிருப்பது என்பது மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. “சட்டத்தின்முன் அனைவரும் சமம், சட்டத்தின்முன் குற்றவாளிகள் தண்டிக்கப் படுவார்கள்” என்ற வார்த்தைகள் எல்லாம் பொய்யானவை; போலியானவை; வெறும் நகைப்புக்குரியவை என்பதையும், இவ்வளவுபெரிய படுகொலையை அரங்கேற்றிய கொலையாளியை அரசு பாதுகாக்கிறது என்பதையும் மக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

சட்டம் என்பது ஒரு கொலைகார வேதாந்தா நிறுவனத்தைப் பாதுகாக்கிறது. அவனை மீண்டும்

மக்களை கொலை செய்யத் தூண்டுகிறது. இந்தத் தமிழ்த் தேசத்தில் பெரும்பாண்மையாக வாழும் உழைக்கும் மக்கள் இன்று அனாதைகளாக ஆக்கப் பட்டு நிற்கிறார்கள். இன்று தமிழகத்தை ஆளுகிற கட்சிகள், ஆளத்துடிக்கின்ற கட்சிகள் இந்த ஸ்டெர்லைட் ஆலைக்கெதிரான போராட்டத் தைத் தமிழகம் தழுவிய அளவில் முன்னெடுக்கத் தயங்குகின்றனர் மறுக்கின்றனர்.

ஆனால் நாளை தேர்தல் வந்துவிட்டால் மக்க ளிடம் பிச்சை(வாக்கு) கேட்டுத் தெருத்தெருவாக அலைவார்கள். மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பிறகு மக்களின் வரிப் பணத்தைச் சுருட்டிக் கொள்ளையடித்து ஆடம்பர வாழ்வை உல்லாசமாகக் கழிக்கும் அரசியல் மாற்றத்திற்கு - ஆட்சி மாற்றத்திற்குப் போட்டி போடும் இந்த அரசியல்வாதிகளை இனிமேல் மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

தமிழக மக்களின் வரிப் பணத்தைக் கொள்ளை யடித்துக் கொழுத்து நிற்கும் இந்திய அரசான நடுவண் அரசும் அதன் எடுபிடிகளுள் ஒன்றான பசுமைத் தீர்ப்பாயமும் தமிழக மக்களின் கோரிக்கை யையும் தமிழக அரசின் உத்தரவையும் தூக்கி குப்பையில் வீசுகிறது.

எடப்பாடி தலைமையிலான தமிழக அரசும் ஆட்சியாளர்களும் உண்மையான மக்களின் கோரிக்கைகளைக் கணக்கில் கொள்ளாமல் ஆலை முதலாளிகளைப் பாதுகாக்கத் துடிக்கும் கேடிக ளாகவே இருக்கின்றனர். **ஆக, தமிழகத்தை விட்டு இந்தியாவே வெளியேறு என்று மக்கள் சொல்வதில் என்ன தவறு?**

தமிழகத்தின் இயற்கை வளங்கள், கனிமவளங்கள், மனித வளங்கள் பாதுகாக்கப்பட்ட வேண்டுமா னாலும், மீனவர்கள், மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டுமானாலும், முதலில் இந்தி யாவிலுள்ள ஒடுக்கப்பட்ட இனங்கள் விடுதலை பெற்றாக வேண்டும். தமிழ்த் தேசிய இனம் சுதந்திர அரசாக - இறையாண்மை கொண்ட அரசாக உருவாக்கப்பட வேண்டும்.

**தமிழகத்தைவிட்டு அந்நிய நிறுவனங்கள் அவற்றின் சொத்துக்களைப் பறிமுதல் செய்துகொண்டு விரட்டி யடிக்கப்பட வேண்டும். இதற்கு, உழைக்கும் மக்களை இன விடுதலைக்குப் போராட அணியப் படுத்துவோம். உழைக்கும் மக்களின் அதிகார அமைப்பை உருவாக்கப் போராடுவோம். இந்தியாவின் - அந்நிய மூலதனத்தின் கிராமப்புற ஆதிக்கக் கும்பலின் தலையீடற்ற புதிய தமிழ்த் தேசத்தைக் கட்டமைப்போம்.**

❖

# இறுதிப் போர் !



பாவலரேறு **பெருஞ்சித்திரனார்**

ஆடினை ஆயிரம்! பாடினை ஆயிரம்!
ஆர்ப்புற யாத்தனை விடுதலைப் பாயிரம்!
அசைத்ததா பகைவரை உன்றனின் வாயுரம்?
தமிழா! அடதமிழா – நீ
அழன்றெழு! அரிமா நடையிடு; வினைமுடி!
அதுதான் செந்தமிழ்த் தாயுரம்!

வீசினை கைகளை! விளைத்தனை சொற்களை!
விலக்கினை யா,குல மதமெனும் புற்களை?
விளைத்திட டா,தனித் தமிழெனும் நெற்களை!
தமிழா! அட,தமிழா – நீ
விரைந்தெழு! வரிப்புலி நடையிடு; துணிவொடு!
வீழ்த்திடு வாய்,பகைப் பற்களை!

உன்னுடன் பிறந்தவன் உனையெதிர்க் கின்றான்;
உன்பகைக் கே,செருப் பாய்உழைக் கின்றான்;
உங்களை இரண்டாக்கி ஆரியன் வென்றான்!
தமிழா! அட,தமிழா – நீ
உடன்விழி! களிறென நடையிடு; முனைவொடு!
உயிர்ப்பிலா விடில்,அவன் கொன்றான்!

ஆரியப் பார்ப்பனன் திருந்தினான் என்றே
ஆருனக் குரைத்தனர்? அவன்குணம் ஒன்றே!
அவனுடற் பூநூலும் உரைதரும் நன்றே
தமிழா! அட,தமிழா – நீ
ஆர்த்தெழு! ஏறென நடையிடு! வலிவொடு
அகப்பகை விலக்குக இன்றே!

எத்தனை ஆண்டுகள் புரிந்தனை போரே!
இற்றதா ஆரியப் பார்ப்பனர் வேரே!
இன்னுமுன் கட்டாரிக் குண்டடா கூரே!
தமிழா! அட,தமிழா – நீ
இணைந்தெழு, இடியென முழங்கிடு! நூறிடு!
இலையெனில் தொலைந்ததுன் பேரே!